Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | மாசி-25 | 09-03-2005 | புதன்கிழமை | ஓசை 19


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11456)

## வீடமைப்பிற்கான வசதிகளை வழங்கக்கோரி

# மட்டு-கல்முனை பிரதான வீதியில் கூடாரங்கள் அமைத்து மறியல்!

### வீதியில் வைத்து சமைத்து உண்டனர்

(மட்டக்களப்பு)

**சுனாமி கடற்பேரலையினால் பாதிப்புக்குள்ளான மருதமுனை மக்கள் வீடமைப்பிற்கான வசதிகளை வழங்கக் கோரியும், குடியிருப்பிற்கான காணிகளை அடையாளப்படுத்தக் கோரியும் தமது தற்காலிக கூடாரங்களைப் பிரதான வீதியில் அமைத்து, தமக்கான மதிய போசன உணவையும் பிரதான வீதியிலேயே சமைத்து பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கல்முனைப் பிரதான வீதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பமானது.

இதன்போது வீதியின் குறுக்காகப் பாரிய நீர்க்குழாய்களைப் போட்டும், மரக்குற்றிகளைப் போட்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் சுனாமி அனர்த்தத்தினால் மருதமுனைப் பிரதேசத்தில் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளன. 50 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.



(12 ஆம பக்கம் பார்க்க)

## இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட இருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு நகரிலும் தளவாயிலும் நேற்று முன்தினமும், நேற்றுஅதிகாலையும் இருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினமிரவு தளவாயில் வேலாயுதபிள்ளை இலங்கேஸ்வரன் (25வயது) என்ற இளைஞர் இனந்தெரியாத நபர்களினால் அவரது வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப் பட்டார்.

இவர் இராணுவத்தினருடன் இணைந்து இயங்கும் ஆயுதக்குழுவொன்றுடன் தொடர்புடையவர் எனத் தெரியவருகிறது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த அழகையா கிருபைராஜா என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இராணுவத்தினருக்கு தகவல் கொடுப்பவராகச் செயற்பட்டு வந்த இவர் அண்மையில் வெளிநாட்டில் இருந்து திரும்பி மீண்டும் நேற்று அதிகாலை கொழும்பு செல்வதற்காகப் பேருந்து நிலையத்திற்கு வந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

## ஊர்வலங்கள், கருத்தரங்குகள், கலை நிகழ்வுகளுடன் சர்வதேச மகளிர் தினம் சிறப்புற அனுஷ்டிப்பு

சர்வதேச மகளிர் தினம் நேற்றுப் பல்வேறு பகுதிகளிலும் சிறபபாக அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டி ஊர்வலங்கள், கருத்தமர்வுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

சர்வதேசப் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் வெகு சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டுள்ளன.

பெண்கள் மீதான வன்முறைகள் இல்லாது ஒழிப்போம், பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகளே என்ற பல கோசங்களை எழுப்பியவாறு நேற்றுக் காலை 10.00 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக இருந்து ஆரம்பிக்கப்பட்ட எழுச்சிப் பேரணி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தை வந்தடைந்தது.

அங்கு கிளிநொச்சி மாவட்ட மாதர்சங்கத் தலைவி செல்வராணி தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. தலைமையுரை என்பன முடிவுற்றதும் ஒக்ஸ்பாம் நிறுவன பிரதிநிதி ரவி அவர்கள் கருத்துரை வழங்கினார். அதனை அடுத்து "சட்டமும் பெண்களும்" என்ற தலைப்பில் போராளி தமிழ்க்கவி கருத்துரை நிகழ்த்தினார். தொடர்ந்து மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)



மல்லாவி




கிளிநொச்சி

## கண்காணிப்புக் குழு வாகனம் சேதம்

(ஆவரங்கால்)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பயணம் செய்த பிக்அப் வாகனத்தினோடு பாரவூர்திமோதி விபத்துக்குள்ளானது. நேற்று மதியம் 1.00 மணியளவில் ஆவரங்கால் சந்திப் பகுதியில் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச்சென்று கொண்டிருந்த போர் நிறுத்தக் காண்காணிப்புக்குழுவினர் பயணம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்-அன்ரன்பாலசிங்கம் லண்டனில் இன்று சந்திப்பு

நோர்வேயின் சிறப்பு சமாதான தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் இன்று லண்டன் செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் சந்திப் பொன்றை நடத்துவதற்காகவே எரிக் சூல்ஹெயம் இலண்டன் பயணமாவதாக நோர்வே அரசாங்கம் தெரிவித்துள்ளது. அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பிப்பது தொடர்பான பேச்சுவார்தையில் அவர் ஈடுபடவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## தெற்கிலுள்ள சிறியபிரிவினரே வடக்குடன் தொடர்பு கூடாதென்கின்றனர்!

### -உலகவங்கி வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்

(கொழும்பு)

தெற்கிலுள்ள சிறியளவினரே வடக்குடன் தொடர்புகளை வைத்திருக்கக் கூடாதெனக் கருதுகின்றனர். கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குச் செல்வதற்கு அரசாங்கத்தின் உலங்கு வானூர்தியையே பயன்படுத்தினோம் எனவே இதனை அரசாங்கம் எப்பொழுதுமே வரவேற்றுள்ளதென உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் கூறியுள்ளார்.

குட்மோர்னிங் சிறிலங்கா நிகழ்ச்சியின் போது லசந்த விக்கிரமதுங்கவுடன் நடத்திய தொலைபேசி நேர்காணலின் போதே பீற்றர் ஹரோல்ட் இவ்வாறு கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### மர்மமான முறையில் உயிரிழந்த

## இராணுவப் பயிற்சி அதிகாரியின் சடலம் நொச்சிமோட்டை கிணற்றிலிருந்து மீட்பு

மர்மமான முறையில் உயிரிழந்த இராணுவ அதிகாரி ஒருவரின் சடலம் வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியாவில் இடம் பெற்ற பயிற்சிப் பாசறை ஒன்றில் கலந்து கொண்டபோது நச்சுத்தன்மையான பொருட்களினால் நோய் வாய்ப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்குப் பொறுப்பாகவிருந்த அதிகாரியுடைய சடலமாக இது இருக்கலாம் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்தச் சடலத்தை அடையாளம் காண்பதற்காக

(12ஆம் பக்கம் பார்க்க)

British BUSINESS SCHOOL

# BRITISH BUSINESS SCHOOL

**Kanthasamy Kovilady,**
**Kilinochchi**

## COMPUTER COURSES

**NEW BATCHES START ON 12-03-2005**

- Diploma In Microsoft Office (5Months)
- Diploma In Desk Top Publishing (5Months)
- Diploma In Web Designing (5Months)
- Diploma In Computer Hardware (3Months)
- Special Diploma In Accounting Packages ACC Pac (3Months)

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

## ENGLISH CLASSES

சிறுவர்களுக்கான ஆங்கில மொழி பாடநெறிகள்
5முதல் 14 வரை

- Level 4 Upper Intermediate (6Months)
- Level 3 Intermediate (6Months)
- Level 2 Lower Intermediate (6Months)
- Level 1 Foundation (6Months)

வளர்ந்தோருக்கான ஆங்கிலமொழிபாடநெறிகள்

- Certificate In English (3Months)
- Diploma In English (3Months)
- Advanced Diploma In English (3Months)

(5780)



# WORLD UNIVERSITY SERVICE OF CANADA

WUSC-SRI LANKA

## கனேடிய உலக பல்கலைக்கழக சேவை

## பணி நிலை வெற்றிடம்

வன்னி பிரதேசத்தின் அபிவிருத்தித் தேவையை கருத்திற் கொண்டு தொழில்சார் பயிற்சி நெறிகளை விஸ்தரிக்கும் நோக்குடன் சமுதாய மற்றும் சேவை மனப்பாங்கும் கொண்ட ஆண்/பெண் இருபாலரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வெளிக்கள உத்தியோகத்தர் (FIELD OFFICER) - முல்லைத்தீவு மாவட்டம் வெற்றிடம் - 01
வெளிக்கள உத்தியோகத்தர் (FIELD OFFICER) - கிளிநொச்சி மாவட்டம் வெற்றிடம் - 02

| தகைமைகள் | அனுபவம் |
|---|---|
| ○ க.பொ. உயர்தரத்தில் சித்தி<br>○ சமூக சேவையில் ஆர்வம்<br>○ தமிழ்/ ஆங்கில அறிவு<br>○ மோட்டார்சைக்கிள் அனுமதிப்பத்திரம்<br>○ கணினி அறிவு | ○ அரசசார்பற்ற நிறுவனத்தில் வெளிக்கள உத்தியோகத்தராக 1 வருடம் கடமையாற்றிய அனுபவம்.<br>○ சிறந்த தொடர்பாடலுக்கான ஆற்றல்.<br>○ நிறுவனத்தைப் பிரதிநிதிப்படுத்தும் ஆற்றல்/ ஆளுமையும். |

02. அலுவலக உதவியாளர் (JAA) - முல்லைத்தீவு மாவட்டம் வெற்றிடம் - 01
அலுவலக உதவியாளர் (JAA) - கிளிநொச்சி மாவட்டம் வெற்றிடம் - 01

| தகைமைகள் | அனுபவம் |
|---|---|
| ○ க.பொ.உயர்தரம் சித்தி<br>○ தமிழ்/ ஆங்கில அறிவு<br>○ மோட்டார்சைக்கிள் அனுமதிப்பத்திரம் | ○ அரசசார்பற்ற நிறுவனத்தில் அலுவலக உதவியாளராக 1 வருடம் கடமையாற்றிய அனுபவம்.<br>○ கணினி அறிவு<br>○ சிறந்த தொடர்பாடல் |

03. நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் -பால் நிலை
(PROGRAMME OFFICER-GENDER)
கிளிநொச்சி /முல்லைத்தீவு

| தகைமைகள் | அனுபவம் |
|---|---|
| ○ க.பொ.உயர்தரம் அத்துடன் பால் நிலை அபிவிருத்தி தொடர்பான பட்டப் படிப்பு<br>○ பால்நிலை அபிவிருத்திதொடர்பாக 3 வருட அனுபவம்<br>○ பயிற்றுவிப்பாளருக்கான தகைமை | ○ சமூகத்துடன் வேலை செய்த அனுபவம்.<br>○ பங்கேற்பு முறைமை தொடர்பான அறிவு<br>○ தமிழ்/ ஆங்கில அறிவு<br>○ குழு நிலையில் வேலை செய்யும் தன்மை<br>○ பாதீடு/திட்டமிடல் தொடர்பான அறிவு<br>○ மற்றைய மாவட்டங்களுக்கு பயணம் செய்யக் கூடிய ஆற்றல்.<br>○ சுயமாக பணியாற்றக் கூடிய தன்மை. |

04. சாரதி (DRIVER) - கிளிநொச்சி/ முல்லை மாவட்டம் வெற்றிடம் -01

தகைமை /அனுபவம்

- விபத்து அற்ற வாகன அனுமதிப் பத்திரம் A/D
- 5 வருட அனுபவம்.
- தமிழ்/ ஆங்கில அறிவு.
- வாகன திருத்தம் தொடர்பான அறிவு.
- குழுவாக வேலை செய்யும் தன்மை.

குறிப்பு:-

- நியமனங்கள் ஏப்பிரல் 15 ஆம் திகதி முதல் வழங்கப்படும்.
- நியமனங்கள் 2 வருடகால ஒப்பந்தம்.
- கிளி/முல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- WUSC முல்லை அலுவலகத்திலும், கிளி. அலுவலகத்திலும் நியமனங்கள் வழங்கப்படும்.
- WUSC நிறுவனத்தின் பணியாளர்கள் நியமன பயன்கள் அனைத்தும் பொருத்தமானது.

**விண்ணப்ப முடிவுத்திகதி மார்ச் 19. 2005**

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி,
பிரதி வெளிக்களப் பணிப்பாளர்,
வூஸ்க்- வடபிராந்தியம்,
இல.30, கோவில் வீதி, குருமன்காடு,
வவுனியா.

(சி.11382)



## வரிவிளம்பரம்

### வேலையாட்கள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு வேலை தெரிந்தவர்கள் இருபாலரும் தேவை. சுயவிபரப் படிவங்களை அச்சகவேலையாட்கள் பதவி ஈழ நாதம்பணிமனை, யாழ்[illegible]லை, கிளி நொச்சி என முகவரி[illegible]டு அனுப்பவும். (5779)

### தேவை

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற, கணக்குப்பதிவு வேலைகள் செய்யக் கூடியவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்[illegible]ானிக்கப்படும். தொடர்புகட்கு:- கதிர் (அமல்)பல், மூக்குக் கண்ணா[illegible]கம், யாழ்சாலை-கிளிநொச்சி. T.p. 2285748 (சி.10871)


# உணவு, சர்பத் தேவைகளுக்கு ஐஸ்கட்டி பயன்படுத்தத் தடை

## முல்லை மாவட்ட தமிழீழ சுகாதார சேவை

(உடையார்கட்டு)

தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளதால் தற்காலிகமாக உணவுத் தேவைக்கும், சர்பத் தயாரிப்புக்கும் ஐஸ்கட்டி பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர். இந்த நடைமுறையை உரிமையாளர்களும், நுகர்வோரும் மறுஅறிவித்தல் வரை கடைப்பிடிக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர் இந் நடைமுறையினைக் கடைப்பிடிக்காத உரிமையாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படு மென்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (19)

# உடையார்கட்டுத் தெற்கில் பொது நோக்கு மண்டபம் அமைப்பு

(உடையார்கட்டு)

உடையார்கட்டுத் தெற்கு குரவில் கிராமத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்ட ஆரம்ப வைபவம் நேற்று முன்தினம் 12.45 மணிக்கு உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் ஜெயதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு உரைகளை வடக்குக் கிழக்கு மாகாண நிகொட் பணிப்பாளர் சுடர், முல்லை மாவட்ட திட்ட இணைப்பாளர் சுதர்சன், நிகொட் உதவித்திட்ட அதிகாரி ரவி ஆகியோர் ஆற்றினர் இ[illegible]னைத் தொடர்ந்து இப்பகுதியில் பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதில் முதலாவது அடிக்கல்லை வடக்கு-கிழக்கு மாகாண நிகொட் பணிப்பாளர் சுடர் நாட்டினார். இரண்டாவது கல்லை கரும்புலி மாவீரர் கப்டன் புலிமகளின் தந்தையாரான முத்துலிங்கம் நாட்டினார். (19)

# தொழில் உபகரணம் வழங்கல்

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பி உடுவில பிரதேச செயலாளர் பிரிவில் மீளக்குடியேறியுள்ள ஆறு குடும்பங்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் தொழில் செய்வதற்கான உபகரணங்களை வழங்கி யுள்ளது.

மீளக்குடியேறிய ஆறு குடும்பங்களும் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக கடைகள்,நடத்துவதற்கும்மற்றும் விவசாயம் செய்வதற்குமான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (41)

# உள்ளீடுகள் பெறுவதில் நெருக்கடி உப உணவுப் பயிர்ச்செய்கை பாதிப்பு

யாழ்.குடாநாட்டில் தரமான விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதில் தோன்றியுள்ள நெருக்கடி நிலைமைகள் காரணமாக இங்கு உப உணவுப் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் உப உணவுப்பயிர்களான கௌப்பி, பயறு, உழுந்து,குரக்கன் போன்றவற்றின் உள்ளீடுகளுக்குத் தட்டுப்பாடு நிலவாதபோதும், இவ்வாண்டு இவ் உள்ளீடுகளைப் பெறமுடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

தரமான விதை உள்ளீடுகள் கிடைக்காமையால் பலவிவசாயிகள் தமது உபஉணவுப் பயிர்ச்செய்கையை இவ்வாண்டு கைவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# 50 மாணவர்களுக்கு உதவு தொகை

சுனாமியால் பாதிக்கப்பட்ட 50 மாணவர்களுக்கான உதவித்தொகை வழங்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

டபிள்யூ.யூ.எஸ்.சி என்ற சர்வதேச நிறுவனத்தினதும், றீடோ என்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தினதும் அனுசரணையுடனும் இவ் உதவியைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வழங்குகிறது.(33)

# மண்டை தீவு வைத்தியசாலை மீளவும் இயங்குமா?

யாழ்.தீவகம் மண்டைதீவு வைத்தியசாலையை மீள இயங்கச் செய்ய துரித நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரி வருகின்றனர்.

எனினும் படையினரது இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ள மண்டைதீவில் உள்ள இம் மருத்துவமனையைப் புனரமைத்து மீள இயங்கவிட படையினர் அனுமதி மறுத்து வருவதால் இவ்வைத்தியசாலையைப் புனர் நிர்மாணம் செய்ய முன்வந்தவர்கள் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளனர். இதனால் இப்பகுதி மக்களுடைய கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் அவர்கள் தமக்கான வைத்தியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளனர். (33)

# பெண்களின் தேசநிர்மாணப் பணிக்கு இராணுவம் வழிவிட்டு விலக வேண்டும்!

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்

(யாழ்ப்பாணம்)

**தேச நிர்மாணப் பணியில் பெண்கள் ஒன்றிணைவதற்கு வழிவிட்டு இராணுவம் விலகவேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:**

ஒடுக்கப்பட்ட பெண்களின் உரிமைக் குரலை உலகில் ஓங்கி ஒலிக்கச் செய்யும் சர்வதேச பெண்கள் தினத்தில் தமிழர் தாயகப் பகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள் நாங்களும் உலகத்தின் ஒடுக் கப்பட்ட பெண்களுடன் எமது கரங்களைக் கோர்க்கின்றோம். தமிழர் தாயகத்தின் தேச நிர்மாணப் பணியில் , சரி அரைப்பங்கினரான பெண்களும் முழு வீரியத்துடன் பாங்காற்ற வேண்டும். ஆனால் பண்பாட்டு ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்படும் பெண்கள், இன ரீதியாகவும் ஒடுக்கப்படுவதனால் அவர்களால் முழு மையாகப் பங்களிக்க முடியவில்லை. எனவே அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுதல் அக ரீதியாகவும், புற ரீதியாகவும் நடக்க வேண்டும். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இராணுவ ரீதியான அடக்குமுறை காரணமாகவும், பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை, இளைஞர்கள், குடும்பத் தலைவர்கள் கைது செய்யப் படுதல், கொலை செய்யப்படுதல், காணாமற் போதல் போன்ற காரணங்களால் இளைஞர்களும், குடும்பத் தலைவர்களும் வெளியேறினர். இதனால் பெண்கள் தவிர்க்க முடியாத தேவையின் நிமித்தம் வெளிவந்து கடமைகளைப் பொறுப் பேற்க வேண்டியிருந்தது. போக்குவரத்துத் தடை காரணமாகப் பெருமளவு பெண்கள் தாமே துவிச்சக்கரவண்டியைச் செலுத்தக் கூடியவர்களாக மாறினர். குடும்ப முகாமைத்துவத்தையும் பொறுப்பேற்றனர். இராணுவ ஆக்கிரமிப்பின் கொடூரச் செயல்கள், பெண்கள் பாலியல் வன் முறைக்கு உள்ளாக்கப்பட்டமை, கொலை செய்யப்பட்டமை, குழந்தைகள் கொலை யுண்டமையானது சுதந்திரமாக வாழ விரும்பிய பல பெண்களைப் போராட் டத்தில் இணையவும் தூண்டியது. போராட் டத்தில் இணைந்த பெண்கள் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக அனைத்துப் பரி மானங்களிலும் செயலாற்ற முடியு மென்பதை தமிழர் தாயகப் பெண்களுக்கு மட்டுமன்றி அனைத்துலகப் பெண் களுக்கும் வாழ்ந்து காட்டி நிரூபித்துள்ளார் கள்.

ஆனால் தெரு எங்கும் இராணுவம் குடிகொண்டிருப்பது பெண்களின் இவ் விருப்பத்திற்கு பெரும் தடையாகவுள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இவ்வாறு உருவாகுவதை விரும்பியபோதும், இராணுவத்திற்கு அஞ்சி பிள்ளைகளை வெளியில் அனுப்பத் தயங்குகின்றனர். தமது பிள்ளைகளை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந் தத்திற்கு ஆளாகின்றனர். அல்லது பாடசாலைகளுக்கும், பல்கலைக் கழகத்திற்கும் மிக அமைதியாகச் சென்று விடுமாறு கூறுகின்றனர்.

சமூகத்தின் சரிபாதியினரான பெண்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்து கொண்டோ, பாடசாலைகளிலும் பல்க லைக்கழகத்திலும் பேசா மடந்தைகளாக நடைபயின்றுகொண்டோ? இருக்க ஒரு வளம் நிறைந்த தேச நிர்மாணம் சாத்திய மற்றதாகிவிடும். எனவே தமிழர் தாயகத் தின் குடிமனைகளுக்கு அருகில் குடி கொண்டிருக்கும் சிறிலங்கா இராணு வத்தை உடனடியாக விலகவேண்டுமென்று நாம் கோரிக்கை விடுக்கின்றோம். தேச நிர்மாணப் பணியில் பெண்களைப் பங்கு பற்ற வைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு நாம் விடுக்கும் இக்கோரிக்கைக்கு உலகமெங்கும் பரந்து வாழும் பெண்கள் இயக்கங்களும் ஆதர வளிக்க வேண்டுமென்றும் கோருகின் றோம் எனத்தெரிவித்தார்.

## இராணுவமும், பொலிசாரும் செயற்பட்ட முறை பாரிய யுத்த நிறுத்த மீறலாகும்!

### விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியம்

இராணுவ வாகனம் மோதி பாடசாலை மாணவி உயிரிழந்ததைத் தொடர்ந்து இராணுவத்தினரும், பொலிசாரும் நடந்து கொண்ட விதமானது பாரிய யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலாகும். என விளையாட்டு விஞ்ஞான மாணவர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் சரியாக நடைமுறைப்படுத்தப் படாததா லேயே இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுகின்றன. மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் இராணுவ பிரசன்னமே இவ் வாறான சம்பவங் களுக்குக் காரணமாகும். எனவே இராணுவம் தனது நிலைகளை மக்கள் செறிவாக வாழும் பகுதிகளிலிருந்து அகற்ற வேண்டும். அதைவிடுத்து மாண வர்கள் மீதும்,மக்கள் மீதும், அக்கறை கொண்டு செயற்படும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மீதும் இராணுவம் தாக்குதல்களை மேற் கொண்டமையானது பாரிய யுத்த நிறுத்த மீறல் என்பதனை வலியு றுத்தி நிற்கின்றோம். என அது மேலும் தெரிவித்துள்ளது. (41)

### வடமராட்சி கிழக்கில்

## தொழில் உபகரணங்கள் இல்லை; நிவாரணத்தை நம்பியே வாழ்க்கை

யாழ்.வடமராட்சிகிழக்கு கடற் றொழிலாளர்களின் தொழில் நடவடிக் கைகள் இன்னமும் வழமைக்குத் திரும்பாததனால் இப்பகுதி கடற் றொழிலாளர்கள் முற்றுமுழுதாக நிவாரண உதவிகளை நம்பியே தமது வாழ்க் கையை நகர்த்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதாயின் அதற்கு 162 இழுவைப் படகுகள்,2794 கண்ணாடி இளை ப்படகுகள், 1580 கட்டுமரங்கள்,2814 வெளி இணைப்பு இயந்திரங்கள் என்பன தேவைப படுகின்றன என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்யத் துரித நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப் படாமையினாலேயே இன்னமும் இப்பகுதி மீனவர்களின் தொழில் நட வடிக்கைகள் வழமைக்குத் திரும்பவில் லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (33)

## சத்திர சிகிச்சைக்கான கற்றலை மீள ஆரம்பிக்க வலியுறுத்தி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் இடைநிறுத்தப்பட்ட சத்திரசிகிச்சைக்கான கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க வலியுறுத்தி மாணவர்ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திர சிகிச்சைக்கான கற்றல் நடவடிக்கைகள் கடந்த மூன்று மாதமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனை மீள ஆரம்பிக்கக்கோரியும், யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் இந்நிலை மீதான அசமந்தப் போக்கைக் கண்டித்தும், எமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். யாழ். மருத்துவபீட இறுதியாண்டு சத்திரசிகிச்சைப்பிரிவு வைத்திய கலாநிதி டி.சி. அம்பலவாணர் அவர்களின் வெளிநாட்டுப் பிரயாணத்தைத் தொடர்ந்து வைத்தியசாலையின் பொது சத்திரசிகிச்சை நிபுணர்களால் தற்காலிகமாகப் பொறுப்பேற்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் இடையூறின்றி மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் நரம்பியல் நிபுணரான வைத்திய கலாநிதி V குணாநந்தன் அவர்கள் சத்திரசிகிச்சைத் துறைக்கான நிரந்தர சிரேஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். இதன் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து மேற்கொண்டு வந்த இறுதியாண்டு சத்திரசிகிச்சை நடவடிக்கையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலை பொது சத்திரசிகிச்சை நிபுணர்கள் விலகிக் கொண்டனர். இதன் மூலம் இறுதி வருட சத்திரசிகிச்சை நடவடிக்கைகள் தொடரப்பட முடியாது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலைமை இறுதியாண்டு மாணவரை மாத்திரமன்றி ஏனைய மாணவரையும் பாதிப்புக்குள்ளாக்குவதால் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் இப்பிரச் சினையில் துரிதமாகச் செயற்பட்டு மீண்டும் இறுதி வருட சத்திரசிகிச்சை கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் வரை இறுதி வருட கற்றல் நடவடிக்கைகளை 07.03.2005 முதல் இடைநிறுத்துவதுடன், அதனை வலியுறுத்தி போராட்டத்தினையும் ஆரம்பிக்கவுள்ளோம். இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் இறுதி வருட சத்திரசிகிச்சை கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக் கப்படும் வரை தொடர்ந்து விஸ்தரிக் கப்படும்.

எனவே இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும், யாழ். பல்க லைக்கழக நிர்வாகமும் விரைவாகச் செயற்பட்டு இப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணுமாறு அவ்வறிக்கையில் கேட்கப் பட்டுள்ளது. (சு,41)

## மந்திகை வைத்தியசாலையை தரம் உயர்த்த நடவடிக்கை


யாழ்.வடமராட்சியிலுள்ள மந்திகை வைத்தியசாலையை உடனடியாகவே தரம் உயர்த்துவதற்கு சிறிலங்கா சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. யாழ்.அரசாங்க அதிபரூடாக இத்தரமுயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்று உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், கி.சிவநேசன் ஆகியோரும் சுகாதார அமைச்சிடம் இது குறித்து ஏற்கனவே பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (33)






தென்மராட்சியில் நேற்று இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில்... படப்பிடிப்பு :- ஆன்சிலின்





லெப். கேணல் கௌசல்யன் உள்ளிட்ட போராளிகள் மற்றும் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு சுனாமியால் உயிர் நீத்த செந்தளிர் சிறுவர் இல்ல சிறார்கள் ஆகியோரின் நினைவாக நோர்வேயின் ஒஸ்லோ நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நினைவு நிகழ்வில்...

# அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கு வீதி ஒழுங்கு முறை தொடர்பாக கருத்தூட்டல்

(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்து பிரிவினரால் கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர் களுக்கு அந்தந்த அலுவலகங்களில் வைத்து வீதி ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான கருத்துரைகள் வழங்கப் பெற்று வருகின்றது.**

தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்து பிரிவு பொறுப்பாளர் சி.சிவகுமாரன் தலைமையில் கடந்த சனிக்கிழமையன்று பகல் 10.00 மணிக்கு இரணைமடுவில் அமைந்துள்ள பொருண்மிய மதியுரையகத்திலும், நண்பகல் 12.00 மணிக்கு பாரதிபுரத்தில் அமைந்துள்ள தமிழீழ நிர்வாக சேவை நடுவப்பணிமனையிலும் மேற்படி கருத்துரைகள் வழங்கப் பெற்றன.

நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்ட வீதிப்போக்குவரத்து கருத்தரங்கு நிகழ்வில் வீதியில் செல்லும்போது பாதசாரிகள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் , சாரதிகள், துவிச்சக்கர வண்டி ஓட்டிகள் வீதி ஒழுங்குக்கமைவாக எவ்வாறு சாரத்தியம் செய்ய வேண்டும் என்பது பற்றி விரிவான கருத்துரைகள் வழங்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது (சோ)

# இ.செ. சங்க தலைமைச் செயலக பிரதிநிதிகள் கிளிநொச்சி வருகை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமைச் செயலகத்தில் இருந்து தலைவர் செயலாளர் உட்பட்ட பிரதிநிதிகள் நாளை கிளிநொச்சிக்கு வருகை தந்து மாவட்ட அரசாங்க அதிபரையும் மற்றும் முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளதுடன் பாதிப்புற்ற மக்கள், மாணவர்களுக்கான நிவாரண விநியோக நடவடிக்கைகளிலும் பங்கு பற்றவுள்ளனர்.

இவர்களுடன் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க மாவட்டக் கிளை பிரிவு, அலகு, கனிஷ்ட செஞ்சிலுவை நிர்வாகிகளையும் சந்தித்து கலந்துரையாடுவதற்கான ஒழுங்குகளுடன் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இச் சந்திப்பு எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# முல்லை மாவட்ட விவசாயத் திணைக்களத்திற்கு ஆளணி, வளப் பற்றாக்குறையால் நெருக்கடி!

(விசுவமடு)

முல்லை.மாவட்ட விவசாய திணைக்களம் பெரும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் இன்மை என்பவற்றால் நெருக்கடிகளுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றது.

இவற்றால் மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

உதவி விவசாயப் போதனாசிரியருக்கு அடுத்த நிலையில் இருக்க வேண்டிய விவசாயப் போதனாசிரியர் இருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை. மேலும் பதினொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் ஏழு-விவசாயப் போதனாசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

மற்றும் இதற்கு கீழான ஊழியர்கள் மட்டத்திலும் பற்றாக்குறை காணப்படுகிறது. (46)

# நடமாடும் சேவை மூலமாக காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகக் காணி அலுவலகத்தினரால் நடமாடும் சேவைகள் மூலம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட காணி உரிமையாளர்களின் தற்காலிகக் காணி அனுமதிப் பத்திரங்கள் யாவும் நிரந்தரக் காணி அனுமதிப் பத்திரங்களாக மாற்றி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றது.

அந்த வகையில் கடந்த வருடம் கிளிநொச்சி மாயவனூர் கிளிநொச்சி செல்வாநகர் ஆகிய கிராமங்களில் காணி அலுவலகத்தினரால் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றதன் பிரகாரம் மாயவனூர் கிராம காணி உரிமையாளர்கள் 118 பேருக்கும் செல்வாநகர் காணி உரிமையாளர்கள் 107 பேருக்கும் தற்காலிகக் காணி அனுமதிப் பத்திரங்கள் நிரந்தரக் காணி அனுமதிப் பத்திரமாக (எல்.டிஓபோமிற்) மாகாண காணி அமைச்சினால் மாற்றம் செய்யப் பெற்று கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகக் காணி அலுவலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

மேற்படி நிரந்தரக் காணி அனுமதிப் பத்திரங்கள் விரைவில் உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கான செயற்பாடுகள் இடம் பெற்று வருவதாக கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர் செ. ஸ்ரீரெங்க நாதன் தெரிவித்துள்ளார். (சோ)

# பங்குனி மாதத்திற்கான சிறப்புத் தமிழிசை அரங்கு

தமிழீழ நுண் கலைக் கல்லூரியின் பங்குனி மாத சிறப்புத் தமிழிசை அரங்கு இன்று மாலை 5.00 மணிக்கு கிளிநொச்சி கலை பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற இருக்கின்றது.

பாட்டு, வயலின், மிருதங்கம் கடம், கெஞ்சிரா, தபேலா, முகர்சிங போன்ற அரங்க நிகழ்ச்சிகளில் துறை சார்ந்த வித்தகர்கள் கலந்து சிறப்பிக்க இருக்கின்றார்கள்.

எனவே குறித்த நேரத்திற்கு அனைத்து தமிழிசை ரசிகர்களையும் கலந்து இசையின்பம் பெற அழைக்கிறார்கள் தமிழீழ நுண்கலைக் கல்லூரியினர்.

## கிளை திறப்பு

வலம்புரி இராணுவ நடவடிக்கையால் முற்றாக அழிக்கப்பட்ட பூநகரி ப.நோ.கூ சங்கக் கிளை திறப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளைக் குழுத் தலைவர் பேரிலிங்கம் தலைமையில் இடம் பெற்றது. மங்கல விளக்கை ப.நோ.கூ. தலைவர் கார்த்திகேசு கிளைக்குழு உறுப்பினர் பஞ்சாட்சரம், பொது முகாமையாளர் ஆகியோர் ஏற்றினர். இந்நிகழ்வில் பலர் கலந்து சிறப்பித்தனர். (34)

# மாதர் அபிவிருத்திச் சங்க முதலாம் ஆண்டு நிறைவுவிழா

(மல்லாவி)

மல்லாவி பிரதேச அனிஞ்சியன் குளம் கிராமசேவையாளர் பிரிவில் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் முதலாமாண்டு பூர்த்தி விழா நிகழ்வு அனிஞ்சியன் குளம் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கிராம மாதர் அபிவிருத்தி சங்கத் தலைவி திருமதி . கு.கமலாதேவி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ரவிகரன், விவசாய போதனாசிரியர் திருமதி. பு.சிவபாலன், அனிஞ்சியன்குளம் கிராம சேவையாளர் அசோகன், கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் மு.கந்தையா ஆகியோர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் மாலினி ஏற்றி வைத்தார். தொடர்ந்து வரவேற்புரையை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் சி.தவமணிதேவி நிகழ்த்தினார். வரவேற்புரையைத் தொடர்ந்து கருத்துரையை கல்விளான் கிராம சேவையாளர் சண்முகநாதன், விவசாய போதனாசிரியர் திருமதி சிவபாலன், துணுக்காய் பிரதேச மாதர் சங்கத்தலைவி திருமதி க.விஜியலட்சுமி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிகரன் கிராம சேவையாளர் அசோகன், பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செ.புனிதன், கிராம முன்னேற்ற சங்க செயலாளர் ம.இராசகுலசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்

இந்நிகழ்வில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பிரதி நிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்களெனப் பலர் கலந்துகொண்டனர். (24)




சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை சுவீடனில் இடம்பெற்ற கலைக்கோலம் நிகழ்வில்...

## கண்டெடுப்பு

செபஸ்தியான் பிள்ளை மரியமலர், (பண்டத்தரிப்பு வடலியடைப்பு) என்பவரின் தேசிய அடையாள அட்டை மற்றும் நிலையான பயண அனுமதி அட்டைக்கு விண்ணபித்த உறுதிச் சிட்டையும் புதுக்குடியிருப்பு பேருந்து வண்டியில் இருந்து மல்லாவியைச் சேர்ந்த க. இரத்தினராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு அனிஞ்சியங்குளம் பாடசாலை ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவா ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும் (24)

# சிரிய அதிபரின் அறிவிப்பு போதாது

# படைகளை முற்றாக அகற்ற வேண்டும்

## –அமெரிக்கா, பிரான்ஸ் வலியுறுத்து

(வோஷிங்டன்)

**லெபனானிலிருந்து சிரியப்படைகள் இரண்டுகட்டங்களாக விலக்கிக் கொள்ளப்படும் என சிரியஅதிபர் பாஷர் அசாத் வெளியிட்டுள்ள அறிவிப்பு போதாது. லெபனானிலுள்ள சிரியப்படையினர் அனைவருமே "மே" மாதத்திற்குள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டுமென அமெரிக்காவும், பிரான்சும் சிரியாவை வலியுறுத்திக் கேட்டுள்ளன.**

படைகளை சிரியா விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் அண்மையில் கூறியதற்கு முழுமையான படை விலகல் என்று அர்த்தமே தவிர அரைகுறை நடவடிக்கை என்று அர்த்தமல்ல என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரேஞ்சு வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சிரியப் படைகளும் மற்ற சிரிய ஊழியர்கள் அனைவரும் லெபனானிலிருந்து முழுமையாக விலக வேண் டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறியிருப்பதாவது;

லெபனான் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி படுகொலை குறித்த ஐ.நா. விசாரணைக்கு சிரியா லெபனான் அதிகாரிகள் முழு ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம் லெபனானில் விரைவில் அரசு அமைக்கப்பட வேண்டும சர்வதேச பார்வையாளர்கள் முன்னிலையில் சுதந்திரமான தேர்தல் நடைபெற வேண்டும் என்று கூறியுள்ளது.

அமெரிக்கா, பிரான்ஸின் முன் முயற்சியில் ஐ.நா.சபையில் கடந்த செப்ரெம்பரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி படைகளை சிரியா முழுமையாக விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

லெபனான் அரசியலில் தலையிடுவதைக் கைவிட வேண்டும் என்றும் அங்கு திட்டமிட்டபடி அதிபர் தேர்தல் நடக்க அனுமதிக்க வேண்டும் என்றும் சிரியாவை ஐ.நா.தீர்மானம் கோரியிருந்தது.

இரு கட்டமாக படைகள் விலக்கிக் கொள்ளப்படும் என்றசிரியாவின் அறிவிப்பைமுதல் நட வடிக்கை என்ற வகையில் வரவேற் பதாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஜாக் ஸ்டிரா கூறியுள்ளார். சிரிய-லெபனான் அரசுகளால் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையின்படி லெபனானின் கிழக்குப் பகுதியில் இருந்து மார்ச் மாதம் இறுதிப் பகுதியளவில் சிரியத் துருப்புக்கள் முழுமையாக வாபஸ் பெறப்படு வார்கள் என்றும் இதற்கு சிரிய மற்றும் லெபனானியத் தலை வர்கள் சம்மதித்துள்ளார் களென் றும் சிரியா தெரிவித்துள்ளது. இந்நிலையிலேயே லெபனானில் "மே" மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னா சிரியத் துருப்புக்கள் வெளியேற வேண்டுமென அமெரிக்காவும், பிரான்ஸ்சும வலியுறுத்தியுள்ளன.



லெபனானை விட்டு வெளியேறும் சிரிய இராணுவத்தினர்.

## சூறாவளி தாக்கும்

அவுஸ்திரேலியாவின் கிறீன் லாந்து பகுதியை "இக்கிறீஸ்" என்ற சூறாவளி இன்னும் இரண்டு நாட்களுக்குள் தாக்கக் கூடு மென்று வானிலை அவதான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். 1974ஆம் ஆண்டு நத்தார் தினந் தன்று நகரின் வடபகுதியைத தாக்கியழித்த "பேஷி" என்ற சூறா வளியைப் பார்க்கிலும் சக்தி வாய்ந்ததாக இந்தச் சூறாவளி இருக்குமென தெரிவித்துள்ளனர்.

## ஈராக்– பகுபா நகரில் தீவிரவாதிகள் தாக்குதல்

## அமெரிக்க இராணுவத்தினர் உட்பட 12 பேர் பலி

### –26 பேர் படுகாயம்

( பகுபா)

ஈராக்கில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய இரு தாக்குதல்களில் அமெரிக்க மற்றும் ஈராக்கிய இராணுவவீரர்கள், போலிசார் உட்பட 12 பேர் உயிரிழந்ததுடன், 26 பேர் படுகாயமடைந்துள்ளனர்.



பாக்தாத்தில் டோரா என்ற இடத்தில் கசபிளங்கா இராணுவநடவடிக்கையின் போது நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணி வெடிகளைத் தேடும் அமெரிக்க இராணுவத்தினர்.

இச்சம்பவம் ஈராக்கின் வட கிழக்கு நகரான பகுபா பகுதியில் நிகழ்ந்துள்ளது.

பகுபா பகுதியிள்ள அமெரிக்க இராணுவச் சோதனைச்சாவடியில் காலை ஏழு மணிக்கு ஆயுதம் தாங்கிய குழுவினர் படைவீரர்களை நோக்கிக சுட்டனர். அத்தோடு வெடிகுண்டு களையும் வீசி தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் ஏழு படை வீரர்கள் உயிரிழந்தனர். பலர் படுகாய மடைந்தனர். இதேவேளை பகுபா பகுதியில் பொலிசார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் அங்கு திடீரென கார்க்குண்டு வெடித்ததில் ஐந்து பொலிசார் அந்த இடத்திலேயே உயிரி ழந்தனர். பலர் காயமுற்றனர். இச்சம்பவம் அன்றையதினம் காலை எட்டு மணிக்கு நிகழ்ந்தது. இந்த இரு தாக்குதல்களிலும் 26 பேர் படுகாய மடைந்துள்ளனர் காயமடைந்தவர்கள் மருத்துவமனை களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## சட்டவிரோதமாக தங்கியிருந்த 74பேரை

## அவுஸ்திரேலிய அதிகாரிகள் நாடு கடத்தினர்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் அனுமதியின்றி பணியாற்றிய 74 பேரை கடந்த திங்கட்கிழமை அவுஸ்திரேலிய குடியகல்வு குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் வெளியேற்றினர். இது பற்றி குடியகல்வு-குடிவரவுத் திணைக்கள அமைச்சர் அமண்டா வான்ஸ்டோன் கூறியதாவது;

வெளியேற்றப்பட்டவர்களில் 57 பேர் மலேசியாவைச் சேர்ந்தவர்கள், 17 பேர் தாய்லாந்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சட்ட விரோதமாகக் குடியேறி தென்கிழக்கு அவுஸ்திரேலியப் பகுதிகளில் உள்ள பண்ணைகளில் வேலை பார்த்து வந்தனர்.இவர்கள் அனைவரும் தனி விமானம் மூலம் அவரவர் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 20000 த்திற்கும் மேற்பட்டோர் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவில் வசித்து வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முறையான அனுமதியின்றி தங்கியிருப்போரை அவுஸ்திரேலிய அரசு படிப்படியாக வெளியேற்றி வருகிறது என்று வான்ஸ்டோன் கூறினார்.

## மரண தண்டனை

(ரியாத்)

சவுதி அரேபியாவில் இந்தியர் ஒருவரை கொலை செய்த சக இந்தியருக்கு நேற்று முன்தினம் தலையைத் துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப் பட்டது.

மரண தண்டனை பெற்றவர் சக இந்தியரை தலையில் கல்லைப் போட்டு கொலை செய்து விட்டு அவரது பணத்தை திருடிச் சென்றார். இந்த வழக்கை விசாரித்த சவுதி நீதிமன்றம் கொலையாளிக்கு தலையை துண்டித்து மரண தண்டனையை நிறைவேற்ற உத்தரவிட்டது.அதன்படி ஹப்தார்-அல்-பத்தன் நகரில் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## கியூபாவிலுள்ள அமெரிக்க சிறையிலிருந்து

## 3 பிரெஞ் கைதிகள் பிரான்சிற்கு அனுப்பி வைப்பு

(பாரிஸ்)

கியூபாவின் குவாண்டனோ பகுதியில் அமெரிக்க அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பிரான்ஸ் பிரஜைகளும் பிரான்ஸிற்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுளளதாக பிரான்ஸின் நீதித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்கள் தற்போது சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சு அதிகாரிகள் அவர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை. இவர்கள் இன்று நீதிபதியின் முன் நிறுத்தப்படவுள்ளார்கள்.

2001ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அல்லது 2002ஆம் ஆண்டு முதற் பகுதியில் இவர்கள் இஸ்லாமிய தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டு குவோண்டனோவில் உள்ள அமெரிக்க இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டார்கள். வோஷிங்டனிலுள்ள அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் விடுத்த அறிக்கையில் இந்த மூன்று பிரஜைகளையும் பிரான்ஸிற் கு அனுப் பியுள் ளதாக தெரிவித்தது. இதேவேளை ஆப்கானிஸ் தானில் அமெரிக்க இராணுவத்தினால் 2001 ஆம் ஆண்டும் 2002ஆம் ஆண்டுகளில் கைதுசெய்யப்பட்டு குவாண்டனோமில் தடுத்துவைக்கப்பட்ட மேலும் நான்கு பிரான்ஸ் கைதிகள் கடந்த யூலை மாதம் நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.






அயல் நாடான மலேசியா தமது எண்ணெய் வயல்களை சூறையாடுவதை தடுக்கக் கோரியும் மலேசியாவை அடக்கக் கோரியும் யகார்த்தாவிலுள்ள மலேசியத் தூதரகம் முன்ஆர்ப்பாட்டம் நடத்தும் இந்தோனேசிய பரா இராணுவத்தினரையும் மலேசியாவை அடக்கு என்ற வாசகத்துடன் ஆர்ப்பாட்டம் நடத்தும் பொது மக்களையும் காணலாம்.

# முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

# மக்களை மீட்கின்ற சமநேரத்தில் அவர்களை அரவணைக்க வேண்டிய தேவையும் இருந்தது

**சுனாமிப்பேரலைகளின் கோரத்திற்குள் சிக்குண்டு மீட்கப் படுகின்றவர்களிற்கான உணவு, தங்குமிட ஒழுங்குகளை ஏற்படுத்துமாறும், அதேவேளை மீட்கப்படுகின்ற உடல்களை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் அண்ணா எங்களிடம் கூறியிருந்தார். அதனால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான அடுத்த கட்டப் பணிகளை செய்வதில் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தோம் என இந்நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த முல்லை.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர் பகிர்ந்தவை உங்களின் பார்வைக்காகத் தொடர்கிறது.**

## பகுதி-37

**அ.லோகீசன்**

பட்டதாரிகள் சங்கக் கூட்டம் ஒன்றுக்காக நான் முல்லைத்தீவுக்குச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தபொழுது கடல் வேகமாக வந்து நகரங்களுக்குள் புகுந்து விட்டதாக தொலைத்தொடர்புக் கருவியூடாக எங்களுக்குத் தகவல் தரப்பட்டது.

இந்தத் தகவலைக் கேட்டவுடன் கடல் கொஞ்சம் மேல வந்திட்டுது போல சனங்களின்ர உடமைகளை அழிச்சிருக்கும். அதால வாகனங்களை விட்டு அந்தச் சாமானுகளை ஏத்திக் குடுக்க வேணும் எண்டு நினைச்சு புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு பிரதேசப் பொறுப்பாளர்களுக்கு அறிவித்தலை வழங்கி வாகன ஒழுங்குகளைச் செய்து விட்டேன்.

இந்த ஒழுங்குகளைச் செய்து விட்டு நான் உடனடி யாகவே அந்தப் பகுதிகளுக்குச் சென்றுகொண்டிருந்தேன். அப்போது வலையன்மடம் பகுதியில் வாகன வசதிகள் கிடைக்காத நிலையில் மக்கள் அவதிப்படுவதாக தகவல் கிடைத்தது. அந்தப் பகுதிக்குப் போய் மக்களின் நிலையைப் பார்த்து அவர்களுக்கான வாகன ஒழுங்கு களைச் செய்து கொடுத்து விட்டு வட்டுவாகல் பாலத்தைச் சென்றடைந்தோம்.



நான் வட்டுவாகல் பாலத்தடிக்குப் போக பாலத்தின் இந்தக் கரைக்கு சில உடல்கள் கொண்டு வரப்பட்டு விட்டன. அவற்றைப் பார்த்து விட்டு பாலத்தைக் கடந்து முல்லைத் தீவுக்குப் போவதற்காக பல தடவைகள் முயற்சித்தோம். ஆனாலும் போக முடிய வில்லை. ஒரு கட்டத்தில் கடல் ஓய்ந்தது. அந்த இடைவெளிக்குள்ளால் மோட்டார் சைக் கிளில் பாலத்தின் மறுகரையைச் சென்றடைந்து விட்டோம். பாலத்தைத் தாண்டிய கையோடு செந்தளிர் சிறுவர் இல்லத்துக்குப் போக வேணும் எண்டுற உந்துதல் எனக்குள் இருந் தது.

அதனால் செல்வபுரம் றோட்டால் செந்தளிர் நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன்: மீட்பு நடவடிக்கைகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. செல்வபுரம் சேச்சடிக்குப் போன போது எனது மோட்டார் சைக்கிளை மறித்து மறித்து "என்னை ஏத்து தம்பி என்னை ஏத்து" என்று எல்லோரும் மண்டாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் எனது மோட்டார் சைக்கிளை ஒரு லேடன் லொறி போலத்தான் பார்த்தார்கள். அந்த இடத்தில் மோட்டார் சைக் கிளின் பெறுமதி அப்படி இருந்தது.

எல்லோரும் அழுது கொண்டும் குழறிக் கொண்டிருந்தார்கள் சிலர் என் கண் முன்னாலேயே செத்துக் கொண்டிருந்தனர்.

அந்தக் காட்சியைப் பார்த்தும் மனம் தாங்க இயலாமல் இருந்தது. அவலக்குரல் எங்கும் ஒலித்துக் கொண்டிருந்தது.

இந்தச் சம்பவங்களை பார்த்தவுடன் வாகனங்கள் தேவை என்பதை தெரியப்படுத்தினேன். அதனை அடுத்து நிதித்துறையைச் சேர்ந்தவர்கள் வாகன ஒழுங்குகளைச் செய்து தப்பியிருந்தவர்களை ஏற்றி இறக்கிக் கொண்டிருந்தனர்.

அடுத்த கட்டமாக கடல் என்ன செய்யும் என்பது எவருக்கும் தெரியாது. அதனால் நான் ஆபத்தான நிலையை எங்களது அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அண்ணாக்கு தெரியப்படுத்தினேன். நகரப் பகுதியால் கடற்படை சிறப்புத் தளபதி சூசை அண்ணாவின் தலைமையில் மீட்பு நடவடிக்கை தீவிரமாக நடைபெற்றுக் கொண்டி ருந்தது. அதனால் மீட்கப்பட்டு வருகின்ற மக்களையும் உயிரற்ற உடல் களாக மீட்கப்படுகின்ற சடலங்களையும் பொறுப ்பெடுத்து அதற்குரிய நடவடிக் கைகளை ஒழுங்கு படுத்துமாறு பணித்திருந் தார்.

உடனடி யாகவே மீட்கப் பட்டு வருகின்ற மக்களுக்கான உணவு, தங்குமிடம் என்பனவற்றை ஒழுங்கு செய்வதற்காக துணைப் பொறுப்பாளர் சின்னண்ணையை புதுக்குடியிருப்புப் பகுதிக்கு, வருகின்ற மக்களுக்கான நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்காகவும் முள்ளியவளை நோக்கி வருகின்ற மக்களுக்கு முள்ளியவளை புதுக்குடியிருப்பு கோட்டப் பொறுப்பாளர் பிறையாளனையும் நியமித்து மக்களுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வந்தோம்.

மக்களுக்கான அவசர ஒழுங்குகளைச் செய்துவிட்டு முல்லைத்தீவு நகரப் பகுதி நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். நகரப் பகுதி எங்கும் பல அளவுகளில் தண்ணீர் மட்டம் இருந்தது. அந்தப் பகுதி நிலை பயங்கரமாய் இருந்தது. இறந்தவர்களின் உடல்களை எவரும் பெரிதாக கவனிக்கவே இல்லை.உடலைத் தட்டிப் பார்ப்போம் உயிரில்லை என்றால் தூக்கி வேறு இடத்தில் வைத்துவிட்டு காயக்காரரைத்தேடி அலைந்து கொண்டிருந்தோம். இயக்கத்தின் அனைத்துப் படையணிகளுமே முல்லைத்தீவில் குவிந்து விட்டன. அவர்கள் மீட்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி செய்து கொண்டிருந்தார்கள்.

இந்தக் கோரத்துக்குள் இருந்து உயிர் தப்பியவர்கள் முள்ளியவளை வித்தியானந்தாப் பள்ளிக்கூடத்திற்கு கொண்டு செல்லப் பட்டுக் கொண்டிருந்தனர். அதனால் அந்த



நெருக்கடிகளைக் குறைப்பதற்காக வித்தியானந்தாவுக்குப் போனேன்.

மழை பெய்து கொண்டிருந்தது. அது மட்டுமல்லாமல் மக்கள் உடுப்பதற்கு உடை இல்லாமலும் நனைந்து கிழிந்த உடைகளுடன் தான் வந்தார்கள். அவர்களுக்கான அனைத்துத் தேவைகளையும் உடனடியாக நிறைவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

முல்லைத்தீவில் இருந்து வருகின்ற மக்கள் எல்லோரும் வித்தியானந்தாவுக்கு தான் வந்து குவிந்தார்கள். அவர்களை ஒழுங்கு படுத்துவது பெரும் நெருக்கடியாக இருந்தது.

மக்கள் பயப்பீதியில் இருந்தார்கள். திடீர் எண்டு எனக்கு ஒரு தகவல் வந்தது. அந்தத் தகவல் பெரும் வியப்பான தகவலாக இருந்தது. முள்ளியவளை மத்திப்பகுதி மக்கள், ஒட்டுசுட்டான் மக்கள் எல்லோரும் கடல் வருது எண்டு சொல்லி இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் அந்தத் தகவல்.மக்கள் வதந்தியைக் கேட்டு இப்படி இடம் பெயர்ந்து கொண்டிருந்தார்கள். உடனடியாக மக்களுக்கான சரியான தகவலை வழங்குவதற்காக ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்துக் கொண்டிருந்தோம்.

முதல் நாள் ஒழுங்கமைக்கவே முடியாமல் இருந்தது. எல்லோருமே பிரிந்துபோன அல்லது இறந்துபோன தங்கள் உறவுகளைத் தேடியபடி அங்கலாய்ப்புடன் இருந்தார்கள்.

இந்த நிலையில் மீட்கப்பட்ட சடலங்களை மக்கள் இனங்காண்பதற்கு ஏற்ற வகையில் வித்தியானந்தா பாடசாலைக்கே கொண்டு செல்வது என்று தீர்மானித்து அங்கே[illegible] கொண்டு சென் றோம். பல்லா யிரம் [illegible]கள் மத்தியில் அவர்களின் பாச உறவு[illegible] சடலங்க ளையும் ஒன்றாகச் [illegible]து வைத்தோம். அப்படியான துயரமான நிலை தவிர்க்க முடியாதபடி ஏற்பட்டுவிட்டது. ஒவ்வொரு உழவியந்திரத்திலும் உடல்களைக் கொண்டு சென்று இறக்குவதற்கு முன்னரே சனக்கூட்டம் பெரும் திரளாக திரண்டு சூழ்ந்து சடலங்களை இனங்கண்டுகொண்டனர்.

இப்படியாக முதல்நாள் வந்த சடலங்கள் அனைத்தும் இனங்காணப்பட்டன என்று கூட சொல்லிவிடலாம். வித்தியானந்தாப் பள்ளிக்கூடம் எங்கும் சடலங்களால் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுப் போன மக்களுக்கு பாதிக்கப்படாத பகுதி மக்கள் எந்தவித முன்னறிவித்தல்களும் இல்லாமல் தம்மாலான உதவிகள் அனைத்தையும் செய்து கொண்டிருந்தார்கள். இந்த உதவிகள் எவையும் நிறைவாகக் கிடைக்க வேணும் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு வேண்டியவற்றை நிறைவாகக் கொடுக்க வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களின் அவாவாக இருந்தது.

இப்படி இருக்க அரசியல்துறைப் பொறுப்பாளர் மக்களை ஒரே இடத்தில் தங்கவைக்காது பிரித்து வேறு இடங்களில் தங்கவைக்கும்படி அறிவித்தார். அவரின் பணிப்பிற்கிணங்க பொதுமண்டபங்கள், பாடசாலைகள் அனைத்தையும் தயார்ப்படுத்தி மக்களைப் பிரித்துப் பிரித்துத் தங்கவைத்தோம்.

அடுத்த படியாக ஒவ்வொரு கிராம ரீதியாக மக்களைப் பாடசாலைகளில் குடியமர்த்தினோம். அந்த வகையில் செயற்படுத்தியதால் பிரிந்திருந்த உறவுகளை இணைக்கக் கூடியதாக இருந்தது. இனங்காணப்பட்ட சடலங்களை எந்தப் பகுதிகளுக்கு கொண்டு செல்ல வி[illegible]புகிறார்களோ அந்தப் பகுதிகளுக்குக் [illegible]காண்டு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செ[illegible]ாம். சடலங் களை இனங் காண் கின்ற [illegible]டவடிக்கை யில் எங்களுக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டது. முள்ளியவளை நோக்கி குறிப்பிட்ட மக்களையும், புதுக்குடியிருப்பு நோக்கி குறிப் பிட்ட மக்களையும் இரண்டு பிரிவாக அனுப்பியதால் அந்தப் பிரச்சினை எழுந்தது. இனங்காணப்படாத சடலங்களைப் புகைப்படம் பிடித்து வைத்தோம்.

முதல் நாள் மாத்திரம் நூற்றுக்கும் அதிகமான இனங்காணப்பட்ட உடல்களை உறவினர்களின் விருப்பிற்கிணங்க அவர்கள் விரும்பிய இடங்களுக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். சடலங்கள் எதனையும் தொடர்ந்து வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டது.

முகாம்களில் இருந்த ஒவ்வொருவரும் மன உளைச்சல்களுடனும், எதிர்பார்ப்புடனும் அகப்பட்ட இடங்களில் இருந்தார்கள். அதனால் மக்கள் எங்கிருக்கிறார்களோ அந்த இடத்துக்கு கொண்டு போய் அவர்களுக்கான உணவுகளை வழங்கினோம்.

எங்கள் சமூகத்தில் மரணச்சடங்கை புனீதமாகச் செய்வார்கள். அந்தப் பெருமைதான் அவர்களின் வாழ்வில் முக்கியமானதாக இருந்தது. அதற்கமைவாக அனைவரது இறுதி அடக்க நிகழ்வுகளையும் நல்லமுறையில் செய்வதற்கான ஏற்பாடுகளை இரவிரவாக செய்து கொண்டிருந்தோம்.

இப்படி இருக்க மக்களுக்கான தேவைகளை நிறைவு செய்வதற்காக செயலணிக்குழுக்களை ஆரம் பித்து அதனூடாக அவர்களின் தேவைகளை நிறைவு செய்தோம். இருபத்தேழாம் திகதி உடல்களை அடக்கம் செய்கின்ற பணி நடைபெற்றது. இரண்டாம் நாள் மதியம் வரை மீட்கப்பட்ட உடல்கள் எல் லாவற்றை யும் வித்தியானந்தாப் பாடசாலைக்கு கொண்டு போய் மக்கள் இனங்காண் பதற்காக வைத்தோம். அதன் பிறகு உடல்கள் பழுத டைய ஆரம்பித்து விட்டது. அதனால் நாங்கள் அடக்கம் செய்வதற்குத் தீர்மானித்த இடங்களிற்கே நேரடியாக உடல்களைக் கொண்டுபோய் வைத்து விட்டு அவற்றை இனங்காண்பதற்காக பாடசாலைகளில் இருந்து ஆட்களை ஏற்றிச் செல்வதற்கான வாகன வசதிகளை மேற்கொண்டு சிறிது நேரங்களின் பின் அவற்றை அடக்கம் செய்தோம்.

அதன் பிறகு வருகின்ற ஒவ்வொரு உடல்களையும் உடனேயே அடக்கம் செய்தோம். மூன்றாம் நாளுடன் சடலங்கள் அனைத்தும் மீட்கப்படுகின்ற பகுதிகளில் வைத்தே தகனம் செய்யப்பட்டது. இதன்பிறகு நாங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தில் ஈடுபட்டோம்.இந்தளவு தொகையிலான மக்களுக்கும் சாப்பாடு, தண்ணீர், மலசலகூட வசதிகள் உள்ளிட்ட அனைத்து வேலைகளையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாய தேவை இருந்தது. எங்கள் முன் இருந்த பாரிய சவாலாகவும் இது இருந்தது. எனவும் குறிப்பிட்ட மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பகிர்ந்தவை அடுத்த பகுதியில்

தொடரும்...

# நோர்வேயின் அனுசரணை சிறிலங்காவிற்கு தேவையற்றதாகிவிட்டது!

**பொ.ஜெயராஜ்**

இனப்பிரச்சினை விவகாரத்தில் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே வகிக்கும் பாத்திரம் என்ன? என்பது குறித்த கேள்வி தற்பொழுது தவிர்க்க முடியாத தொன்றாகியுள்ளது. ஏனெனில் சிறிலங்கா அரசு நோர்வே குறித்துக் கொண்டுள்ள பார்வை அதன் நடவடிக்கைகள் குறித்து தற்பொழுது கருத்திற்கொள்ள வேண்டிய அவசியம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

சுனாமி அனர்த்தத்தினால் இலங்கை பாதிக்கப்பட்டபோது விரைந்து உதவி செய்தமைக்கு நன்றி தெரிவிப்பதற்காக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட தூதுவராக இந்தியா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு தெரிவித்த கருத்துக்கள் நோர்வேயின் ஏற்பாட்டாளர்களின் நிலை குறித்துப் பலமான கேள்வியை எழ வைத்துள்ளது.

அங்கு தூரதர்ஷன் தொலைக்காட்சிக்கு விரிவான பேட்டி ஒன்றை அளித்துள்ள அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், "இலங்கையில் எந்த வகையான தீர்வு காணப்படுவதை இந்தியா விரும்புகின்றது... வேறு எந்த வெளிச் சக்தியும் எதையும் கூற முடியாது. தீர்வு எத்தகையதாக இருக்க வேண்டும் என்று கூறக்கூடிய ஒரே வலிமை மிக்க நாடு இந்தியா தான்'' எனத் தெரிவித்துள்ளமையே நோர்வே பாத்திரம் குறித்து இத்தகைய கேள்விகளுக்குக் காரணமாகின்றது.

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பான விடயத்தில் மட்டுமல்ல வேறு பல்வேறு விடயங்களிலும் இந்தியா காத்திரமாகப் பங்காற்ற முடியும் என்பது அரசியல் புரிந்த அனைவருக்கும் தெரிந்ததொன்றே. இதற்கு வேறு எக்காரணிகளையும் விட இந்தியாவினது புவிசார் அரசியல் ஒன்றே அடிப்படையாக அமையப் போதுமானதாகும்.

இதேவேளை இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா பங்களிப்பதையும், காத்திரமான பாத்திரமொன்று வகிப்பதையும் எவருமே எதிர்ப்பதாகவும் இல்லை. குறிப்பாகத் தமிழ் மக்கள் தரப்பில் இதற்கான எதிர்ப்பு இருப்பதாக இல்லை.

இந்தியாவிற்கும், இலங்கைத் தமிழ் மக்களிற்கும் இடையிலான உறவானது வரலாற்று ரீதியிலானது. இலங்கைத் தமிழ் மக்கள் மீது சிங்களப் பேரினவாத சக்திகள் ஒடுக்கு முறைகளைக் கையாளத் தொடங்கியமையும், இலங்கைத் தமிழ் மக்களை என்றுமே சந்தேகக் கண்கொண்டு நோக்கியமையும் இவர்கள் இந்தியா சார்பானவர்கள்; இந்தியாவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டவர்கள் என்பதனாலேயே ஆகும்.

இதற்கு ஏற்றால் போன்றே இனப்பிரச்சினை கூர்மையாகி ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி கண்டு வந்த வேளை தமிழ் மக்களும், அமைப்புக்களும் இந்தியாவின் அனுசரணையை எதிர்பார்த்தே இருந்தன. தங்கள் தளங்களையும் இந்தியாவிலேயே அமைத்து இருந்தன.

இதேவேளை இந்தியா இனப்பிரச்சினை விடயத்தில் மேற்கொண்ட திம்புப் பேச்சுவார்த்தையில் இருந்து 1987 இந்திய-சிறிலங்கா அரசிற்கு இடையிலான சமாதான ஒப்பந்தம் வரையில் இந்தியாவின் அபிலாசைகளுக்கு ஏற்ற வகையில் விட்டுக் கொடுப்புக்களுடனேயே தமிழ் மக்களும், அமைப்புக்களும் நடந்து கொண்டன.

இந்த நீண்ட வரலாற்றில் இந்தியாவின் நண்பனாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் என்றுமே இருந்ததில்லை. பௌத்த-சிங்களவர்கள் வேதமாகப் போற்றப்படும் மகாவம்சத்தில் இருந்து 1987 ஆம் ஆண்டு சமாதான உடன்பாடு வரையில் சிங்களவர்கள் இந்தியாவின் விரோதியாகவும், பகைவர்களாகவுமே இருந்துள்ளனர்.

ஏன் 1987இல் இந்திய இராணுவம் இலங்கையில் காலடி எடுத்து வைத்த பின்னரும் கூட இந்தியாவின் வருகைக்கு எதிராக வன்முறையில் இறங்கியவர்களும் சிங்களவர்களே ஆகும்.

இவ்வாறாக எதிரியாக இருந்தவர்கள் ஈழத்தமிழர்களை ஆயுத ரீதியில் அடக்கி ஒடுக்கிவிட வேண்டும் என்ற ஒரே ஒரு குறிக்கோளுடன் மட்டுமே இன்று இந்தியாவின் நேசசக்தி போல் தம்மைக் காட்டிக்கொள்ள முற்பட்டுள்ளனர்.

இதேசமயம் தமிழ் மக்கள் பெரிதும் நம்பியிருந்த இந்திய அரசு தமக்குச் சார்பானதாகச் செயற்படுவதை நிறுத்தியபோதும், நடுநிலையாளர்களாக பக்கச்சார்பற்றவர்களாகச் செயற்படும் வரையில் தமிழ் மக்களும் சரி, விடுதலைப்புலிகளும் சரி இந்திய அரசை எதிர்க்கவில்லை. இந்தியாவின் விருப்பம், நலன் என்பவற்றைக் கருத்திற்கொண்டே செயற்பட்டனர்.

ஆனால் இந்திய அரசு தமிழ் மக்களின் நலனுக்கும், அவர்களின் தாயகம், தேசியம் என்பனவற்றைப் பலவீனப்படுத்தும் வகையிலும், அன்றி தமிழ் மக்களின் அபிலாசைகளில் அக்கறை கொள்ளாதவகையிலும் செயற்படத் தொடங்கியபோதே தமிழ் மக்களிடம் இருந்து அதற்கு எதிர்ப்புக் கிளம்பியது. இது பின்னர் வருந்தத்தக்க நிகழ்வுகளுக்கும் காரணமாகியது.

ஆனால் இந்தியா மீண்டும் நடுநிலைமையாளராக இலங்கை இனப்பிரச்சினையில் பங்காற்றுவதைத் தற்பொழுதும் எவரும் எதிர்ப்பதாக இல்லை. ஆனால் இந்தியாவை இனப்பிரச்சினையில் தலையீடு செய்யுமாறு கோரும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இந்தியாவை அத்தகையதொரு பாத்திரத்தை வகிக்குமாறே கோருவதாக இல்லை. சிறிலங்கா அரசு சார்பு பாத்திரத்தை வகிக்குமாறு கோருகின்றனர்.

அதாவது இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதிலும் இந்தியாவிடமிருந்து ஆயுதப்படைத்தரப்பிற்கு பல்வேறு வகையிலும், ஒத்துழைப்பை நாடி நிற்கும் சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியாவைத் தமது சார்பாகவே இனப்பிரச்சினை விவகாரத்தில் ஈடுபடுத்திக் கொள்ள முற்பட்டு நிற்கின்றார்கள். போட்டியில் நடுவராக இருக்க வேண்டியவரை தமது அணிக்காக விளையாடுபவராக இருக்க வேண்டும் என்று சிறிலங்கா அரசு விரும்புகிறது.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவிற்கு முக்கியமான பாத்திரம் ஒன்று உண்டு என்பதும், இந்தியா இப்பிராந்தியத்தின் சக்தி வாய்ந்தது என்பதும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றே. ஆகையினால் இந்தியாவின் பாத்திரம் நிராகரிக்கப்படத்தக்கதல்ல என்பதும் யதார்த்த பூர்வமானதே.

ஆனால் லக்ஷ்மன் கதிர்காமர் கோரியுள்ளது போன்று "தீர்வு எத்தகையானதாக இருக்க வேண்டும் எனக் கூறக்கூடிய வல்லமை பொருந்திய நாடு இந்தியா தான்" எனக் கூறுவதானது விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறியிருப்பது போன்று இந்தியாவைச் சிக்கலில் மாட்டி வைக்கும் செயலே ஆகும்.

ஏனெனில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எது என்பதை தீர்மானம் செய்ய வேண்டியவர்கள் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே ஒழிய இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ஈடுபடும் ஏற்பாட்டாளர்களோ, மத்தியஸ்தர்களோ இல்லை. சிலவேளை ஏற்பாட்டாளரோ, மத்தியஸ்தரோ நியாயபூர்வமான தீர்வொன்றை வெளிப்படுத்துகையில் அதனை இருதரப்பும் ஏற்றுக்கொள்ளலாம். அதை விடுத்து ஏற்பாட்டாளரையோ, மத்தியஸ்தரையோ தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு கோருவது அவரைச் சார்பு நிலைக்கு இட்டுச் செல்வதாகிவிடும்.

இந்த வகையில் சிறிலங்கா அரசின் நடவடிக்கையானது இந்திய அரசை சார்பு நிலை ஒன்றிற்குள் இட்டு வருவதற்கானதாகவே உள்ளது. இதேசமயம் தற்பொழுது சமாதான ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வேத் தரப்பினரை ஓரம் தள்ளுவதற்கான செயற்பாடாகவுமே உள்ளது. ஆனால் இது தனியாக நோர்வேத்தரப்பை மட்டுமல்ல, மேற்குலகத்தவரையும் ஓரம் தள்ளும் செயலாகவும் கொள்ளக்கூடியதாகும்.

நோர்வேத்தரப்பு சுமார் நான்காண்டு காலமாக இனப்பிரச்சினை விடயத்தில் ஈடுபாடு காட்டிவரினும் மூண்றான்டு கால யுத்த நிறுத்த நீடிப்பைத் தவிர வேறு முயற்சிகள் எதிலும் முன்னேற்றம் கண்டதாக இல்லை. வேறுவிதமாகக் கூறுவதானால் சிறிலங்கா அரசின் தேவைக்கேற்றவாறான யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டதோடு சரி, அத்தோடு சிறிலங்கா அரசாங்கம் விரும்பியவாறு இனப்பிரச்சினைக்கான தீர்வு எதுவும் எட்டப்படவும் இல்லை. அதாவது நோர்வே அரசாங்கத்தின் ஊடாகவும், தனது நோக்கத்தை சிறிலங்கா அரசு நிறைவு செய்து கொண்டுள்ளது என்றே கூறுதல் முடியும்.

அதாவது, சிறிலங்கா ஆட்சியாளர்கள் அதிலும் குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவும், அவரது ஐ.ம.சு முன்னணி அரசாங்கமும் நோர்வேத் தரப்பின் ஏற்பாட்டில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்குத் தயாராக இல்லை. மாறாக, இனப். பிரச்சினைத் தீர்வுக்கான நிலைக்கு ஏற்ற ஆக்கபூர்வமானதும் நீதியானதும், நடைமுறையில் சாத்தியமானதொரு தீர்வு பரிசீலனைக்கு எடுக்கப்படும்போது அதற்கு நோர்வேத்தரப்பும் உந்து சக்தியாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.


ஏனெனில் இனப்பிரச்சினைத் தீர்விற்கு அதிகாரப்பகிர்வும், சமஷ்டி முறையும் நடைமுறையில் சாத்தியமான யதார்த்தபூர்வமான அணுகுமுறையாக இருக்கக் கூடியவை. இத்தகையதொரு தீர்மானத்தை நோர்வேத்தரப்பும், மேற்குலக அரசுகளும், வரவேற்பதற்கு நிரம்பவே வாய்ப்புக்கள் உண்டு. ஏனெனில், இன்று உலகில் இனப்பிரச்சினைகளுக்கு இத்தகைய தீர்வுகளே முன்மொழியப்படுபவையாகவுள்ளன.

அது மாத்திரமல்ல அதிகாரப் பகிர்வும், சமஷ்டியும் பிரச்சினைகளுக்கு தீர்வேயொழிய சிறிலங்கா ஆட்சியாளர்கள் கூறுவது போன்று பிரிவினைக்கான அடிப்படையல்ல.

ஆனால் சிறிலங்கா அரசின் நிலைப்பாடு காரணமாகவே நோர்வேத்தரப்பு கடந்த நான்காண்டு கால சமாதான முயற்சியில் பெரும் முன்னேற்றம் எதையும் காணாமல் இருப்பதில் இருந்தே புரிந்துகொள்ளமுடியும். அதாவது நோர்வேத்தரப்பு சிறிலங்கா அரசுக்கும், தமிழ்மக்களுக்குமிடையிலான இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மட்டுமல்ல இயற்கை அனர்த்தமான சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கான நிவாரணப்பணி தொடர்பான விடயத்திலும் முன்னேற்றம் எதனையும் காணமுடியவில்லை. என்பதே நிதர்சனமாகும்.

குறிப்பாக பெரும் முயற்சி எடுக்கப்பட்டு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை விடயத்திலும் சரி, சுனாமி நிவாரணப் பணிக்கான பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் சரி இதுவரையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதாக இல்லை. நோர்வே ஏற்பாட்டாளர்கள் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டபோதும் அம் முயற்சிகளில் வெற்றி பெற சிறிலங்கா அரசிடம் இருந்து ஆதரவு எதுவும் கிட்டவில்லை.

இத்தகையதொரு நிலையிலேயே நோர்வே வகிக்கும் பாத்திரம் என்ன? என்ற கேள்வி தவிர்க்கமுடியாததாகியுள்ளது. அதாவது ஒரு புறத்தில் நோர்வே அரசின் முயற்சிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து ஆக்கபூர்வமான ஒத்துழைப்புக் கிடைக்கப்பெறாத நிலையிலும், ஆட்சிக்கு வந்ததிலிருந்து இந்தியாவின் பக்கச் சார்பான நிலைப்பாட்டைக் கோரி நிற்பதோடு, ஆயுதப் படைகளையும் ஆட்சியாளர்கள் பலப்படுத்தி வரும் நிலையிலும் நோர்வேயின் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்துக் கேள்வி எழுகின்றது.



இதனைச் சற்றுத் தெளிவுடன் கூறுவதானால், சிறிலங்கா அரசிற்கு நோர்வே தரப்பினரின் தேவை சிறிலங்கா அரசு முழு அளவில் யுத்தம் ஒன்றிற்குத் தயாராகும் வரையிலோ அன்றி இந்தியா சிறிலங்கா அரசின் கோரிக்கைக்கு இணங்கி இலங்கை இனப்பிரச்சினையில் சிறிலங்கா அரச சார்பு நிலைப்பாட்டுடன்-அவ்வாறு இந்தியா களமிறங்குமா என்பது வேறு விடயம்-தலையீடு செய்யும் வரையிலுமே தேவைப்பாடானதாக மட்டுமே உள்ளது.

அவ்வாறு இல்லாது விடில், நோர்வேத்தரப்பு மேற்கொண்ட முயற்சிகளுக்கும், கள யதார்த்தத்திற்கு ஏற்றவகையிலான தீர்வு முயற்சிகளில்-குறைந்தபட்ச ஒத்துழைப்பையாவது வழங்கியிருக்கும். ஆகக்குறைந்தது சுனாமி அனர்த்த நிவாரணப் பணிக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கும் விடயத்திலாவது சந்திரிகா அரசு இணக்கப்பாடானதொரு நிலைப்பாட்டை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஆட்சியாளர்கள் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

மாறாக விடுதலைப்புலிகளுக்கெதிரான மறைமுகப்போர் ஒன்றை நடத்த முனைந்து நிற்பதும், இந்தியாவை வலுக்கட்டாயமாக இவ் விவகாரத்துக்குள் சிக்க வைக்க முற்படுவதில் இருந்தும் நோர்வேயின் அனுசரணை சிறிலங்கா அரசிற்கு தேவையற்றதொன்றாகி வருகின்றதென்ற முடிவிற்கு வருவதல் தவறானது.

# இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக அரசு தெளிவான நிலைப்பாட்டைக் கூறவேண்டும்

## -ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை குறித்த பேச்சுவார்த்தை தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வினாடிக்கு வினாடி முரண்பட்ட நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் தனது தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடு என்ன? என்பது குறித்து நாட்டு மக்களும் சர்வதே சமூகமும் விளங்கிக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

கடந்த மாதம் 22 ஆம் திகதி தகவல் திணைக்களப் பணிப்பாளர் விடுத்த அறிக்கையில், இடைக்கால நிர்வாகசபை குறித்துப் புலிகளுடன் நேரடிப்பேச்சுவார்த்தைக்கு தயார் என்று கூறியிருந்தார். இடைக்கால நிர்வாக சபைகுறித்துப் பேசிய பின்னர் இறுதித்தீர்வு குறித்துப் பேசலாம் என்றும் அவர் கூறியிருந்தார். இதே கருத்தினை அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவும் கூறியிருந்தார். ஜயந்த தனபாலவின் கருத்தே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டி.யு. குணசேகர கூறியுள்ளார். ஆனால் ஜே.வி.பி யின் செயலாளர் ரில்வின் சில்வா, ஜே.வி.பியின் பாராளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்ச ஆகியோர் அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளரின் அறிக்கை அரசாங்கத்தின் நிலைப்பாடல்ல. இடைக்கால நிர்வாகசபை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினால் அரசாங்கத்திலிருந்து விலகுவோமென்றும் கூறியுள்ளனர்.

அவற்றை விட அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் மீண்டும விடுத்த அறிக்கை முரண்பாடாக அமைந்துள்ளது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தினை தெரிவித்து வருகின்றனர்.

அரசாங்கத்தகவல் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால ஆகியோரின் கருத்துக்கள் அரசாங்கத்திற்குள் உள்ளவர்களினால் மறுக்கப்படுகின்றது. இந்த நிலையில் ஜயந்த தனபாலவும் தகவல் திணைக்களப் பணிப்பாளரும் தமது பதவிகளிலிருந்து விலகுவதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

அரசாங்கத்திற்குள் இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் முரண்பாடு தொடர்கிறது யாருக்கு இவர்கள் பொய்கூறுகின்றனர்? அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபைதொடர்பில் உறுதியான நிலைப்பாட்டினைத் தெரிவிக்க வேண்டும் என்று கூறினார்.

## பருப்பு மூடைகள் பறிமுதல்

மட்டக்களப்பு காத்தான்குடியிலிருந்து கொழும்பிற்கு கடத்தப்பட்ட ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண பருப்பு மூடைகள் 198 வெலிக்கந்தை பொலிஸ் சோதனைச்சாவடியில் வைத்து பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

குறிப்பிட்ட பார ஊர்தி ஞாயிறு மாலை வெலிக்கந்தை பொலிஸ் சோதனைச் சாவடியில் நிறுத்தி வைக்கப்பட்டு சோதனையிடப்பட்ட போது உள்ளே அரிசி மூடைகள் இருப்பதாக சாரதியும் உதவியாளரும் பதிலளித்துள்ளனர்.

இவை தொடர்பான விபரங்களை கேட்ட போது அவர்கள் சரியான விளக்கம் அளிக்கவில்லை. இதையடுத்து பார ஊர்தியில் பயணம் செய்த மூவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பார ஊர்தியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

# தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழக்காளி ...... இராஜரட்ணம், சிவராசா
மலையாளபுரம்,
கிளிநொச்சி.

வழ இல:-162/03.
தன்மை:- மணநீக்கம்.

"எதிர்"

எதிராளிகள் ........ சிவராசா பிரதீபா,
மே/பா.மாடாசாமி
சண்முகவேல்,
மலையாளபுரம்,
கிளிநொச்சி.

## இடைக்காலத்தீர்வை

**மேற்படி வழக்கில் 18/01/2005 அன்று மாவட்ட நீதியாளர் செல்வி சி.சாதனா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் அவர் தரப்பு சட்டவாளரும மன்றில் சமுகமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டும், தவணைக்கு மன்றில் தோன்றாத காரணத்தால் ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கின் வழக்காளியின் சாட்சியத்திற்கமைய வழக்காளியின் கோரிக்கைகளின்படி இவ்வழக்கின் வ.01 என்ற ஆவணத்திற்கமைய செய்யப்பட்ட பதிவுத் திருமணத்தை இரத்து செய்தும், திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளையின் பாதுகாவலன் வழக்காளி எனவும் பிரகடனம் செய்து வழக்காளியின் செலவுடன் ஒருமுகத்தீர்ப்பளிக்கப்பட்டு அதன்படி இத்தீர்வை பதியப்படுகின்றது.**

வரைபு
திரு. ரி. எஸ். வேலவர்,
வழக்காளி சட்டத்தரணி,
செல்வாநகர் கிளிநொச்சி.

சி. சாதனா
மாவட்ட நீதியாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

( 5777 )

# தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழக்காளி :- இராஜரட்ணம் சிவராசா
மலையாளபுரம்,
கிளிநொச்சி.

வழ.இல:-162/04.
தன்மை:-மணநீக்கம்.

"எதிர்"

எதிராளிகள் :- சிவராசா பிரதீபா,
மே/பா.மாடாசாமி
சண்முகவேல்,
மலையாளபுரம்,
கிளிநொச்சி

## பகிரங்க அறிவித்தல்

* * * * * * * * * * * *

**இதனுடன் பிரசுரிக்கப்பட்ட இடைக்கால தீர்வை தொடர்பில் ஆட்சேபனைகள் எதுவும் எதிராளிக்கோ அல்லது இவ் வழக்குடன் அக்கறையுடைய எவருக்குமோ இருப்பின் அதனை மன்றில் தோன்றி 14 நாட்களுக்குள் வெளிப்படுத்த தவறுமிடத்து இத்தீர்வை முற்றான தீர்வையாகப் பதியப்படும் என இத்தால் அறியத்தரப்படுகிறது.**

"மன்றின் கட்டளைப்படி"

வரைபு

திரு. ரி. எஸ். வேலவர்,
வழக்காளி சட்டத்தரணி
செல்வாநகர் கிளிநொச்சி,

செ.மாணிக்கராசா
பதிவாளர்
மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

( 5778)

# கேள்வி அறிவித்தல்

பெறுமதிசேர் வரியின் (விஏரி) பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும், இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்தும் அனுமதிக்கப்பெற்ற சங்கங்களிடமிருந்தும் கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விகள் கிளி.மாவட்ட செயலக கேள்விச்சபையால் கோரப்படுகின்றது. இது சம்பந்தமான விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. கூட்டுறவு விற்பனை நிலையமும், களஞ்சியமும் மீளமைத்தல்-கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் வட்டக்கச்சி
2. கூட்டுறவு விற்பனை நிலையமும், களஞ்சியமும் மீளமைத்தல்-அக்கராயன் ப.நோ.கூ.சங்கம் அக்கராயன்.
3. கமக்கார அமைப்பும் , நெற்களஞ்சியமும் மீளமைத்தல்-கல்மடுநகர்
4. கமக்கார அமைப்பும், நெற்களஞ்சியமும் மீளமைத்தல்-கரியாலை நாகபடுவான்.
5. நிலச்சமன் பொறி மூலம் இடிபாடுகள் அகற்றுதல்-கிளிநொச்சி மாவட்டம்
6. மூன்றாம் தர விடுதி (11) மீளமைத்தல்-உதவி அரச அதிபர் பிரிவு, கரைச்சி
7. மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு கட்டடம் சீர்செய்தல்-மாவட்டச் செயலகம் கிளிநொச்சி.

**கேள்விப்பத்திரங்கள் 2005.03.23 ஆம் நாள் பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர முடிவு நாள் 2005.03.24 ஆம் நாள் 10.00 மணிவரை.**

**தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்/கிளி.மாவட்ட செயலக
கேள்விச்சபைத் தலைவர்,
கிளிநொச்சி மாவட்டம்.**

(சி.11380)


# தமிழீழ நுண்கலைக் கல்லூரியின்

## பங்குனி மாத தமிழிசை அரங்கு

*இடம் :- கலைபண்பாட்டு மண்டபம் கிளிநொச்சி* *காலம் :- 09.03.2005 இன்று மாலை 5.00 மணி*

"என் இனமே என்சனமே", "பூபாளம் பாடும் நேரம்" போன்ற விடுதலைப்பாடல்கள் மூலம் விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்து, கனடாவில் இருந்து தாயகத்திற்கு வருகைதந்திருக்கும், தாயகக்கலைஞர்,

இன்னிசை வேந்தர் திரு.பொன் சுந்தரலிங்கம் அவர்களின்



## "இன்னிசை விருந்து"

தலை சிறந்த நுண்கலைக் கலைஞர்களும் கலந்து கொள்கிறார்கள்.

அனைவரும் வருக.

(சி.11381)

நுண்கலைக்கல்லூரியினர்






# குடாநாட்டில் படையினரின் வன்முறைக்கெதிராக...

**28**

➡ விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் அம்பாறை மாவட்டம் தம்பட்டை சிறிலங்கா விசேட அதிரடிப் படையின் முன்னரங்கப் பகுதியிலிருந்து வந்த நபரின் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி காயமடைந்தனர்.

➡ பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார். அத்துடன் சனாதிபதியை சந்தித்து பேசிவிட்டு நாடு திரும்பினார்.



➡ மட்டக்களப்பு பன்சேனைக் கிராமத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையம் திறப்பு.



➡ தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு கலைஞர்கள் தமிழீழத் தாயகத்திலிருந்து சுவிற்சர்லாந்து சென்றடைந்தனர்.



➡ நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பிலிருந்து டில்லி பயணம்.

➡ வடமராட்சி கிழக்கு நெல்லியான் என்னுமிடத்தில் படகு உற்பத்தி மையம் திறப்பு.




➡ இ.தொ.கா.அமைச்சர்கள் தமது பதவி விலகலை விலக்கிக் கொள்வதாகத் தெரிவிப்பு.

**01.**

➡ அம்பாறையில் பெண் போராளிகள் மீதான தாக்குதல் புலிகளையும், தமிழ் மக்களையும் சீண்டும் நடவடிக்கை போன்றதென விடுதலைப் புலிகள் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக்குறிப்பில் தெரிவிப்பு.

➡ வவுனியா மாவட்ட அரசியல்துறை செயலகத்திற்கு போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அனுமதியின்றி பிரவேசம்.

➡ தமிழீழ வைப்பகத்தின் 11ஆவது கிளை பூநகரியில் திறந்து வைப்பு.




➡ சுனாமியால் ஏற்பட்ட சொத்தழிவுகள் வழங்கப்படாமை குறித்து முல்லைத்தீவு பிரதேச வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்.

➡ சுனாமி பேபி அபிலாஷ்'ம் அக்குழந்தையின் பெற்றோரும் அமெரிக்கா பயணம்.

➡ மட்டு-அம்பாறையில் பெண் போராளிகள் சுடப்பட்ட சம்பவம் குறித்து சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது.

**02.**

➡ சிறிலங்கா அரசின் அராஜகப் போக்கைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி இடம் பெற்றது.

➡ மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீதான தாக்குதலைக் கண்டித்து கிளி.மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர் ஒன்றினை போர்நிறுத்த கண்காணிப்பு குழுவிடம் கையளிப்பு.

➡ தனியார் மருத்துவக் கல்லூரியொன்றினை இலங்கையில் ஆரம்பிப்பதனை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர்.


➡ தோல்பொருள் உற்பத்தி நிலையம் மல்லாவியில் திறப்பு.

➡ புதுக்குடியிருப்பில் போராட்டத்தில் இணைந்த 18 வயதிற்கு உட்பட்ட மாணவி பெற்றோரிடம் ஒப்படைப்பு.

➡ விடுதலைப்புலிகளின் போராளிகள் மீதான தாக்குதல் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு வெறும் கண்துடைப்பு என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பி.பி.சி க்கு தெரிவிப்பு.

**03.**

➡ திருமலையில் நகரசபைக்குச் சொந்தமான முற்றவெளியில் சிங்களவர்களை சட்டவிரோதமான முறையில் குடியேற்ற ஜே.வி.பி.யினர் மேற்கொண்ட முயற்சி மக்களின் எதிர்ப்பு நடவடிக்கையால் முறியடிப்பு.



➡ கொடிகாமம் நகரப்பகுதியில் இனந் தெரியாத குழு மேற்கொண்ட வாள்வெட்டில் இருவர் காயமடைந்தனர்.

➡ தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்தநாளன்று அடிக்கல் நாட்டப்பட்ட பொன்னம்மான் ஞாபகார்த்தக் கட்டடம் கிளி.பாரதி வித்தியாலயத்தில் திறப்பு.




➡ கொழும்பு மாநகர சபையின் முன்னாள் ஐ.தே.க உறுப்பினர் ஏணஸ் பீரிஸ் சுட்டுக்கொலை.


➡ நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் சிறிலங்கா பிரதமரை சந்திப்பு.

**04.**

➡ யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி இராணுவத்தினரின் உழவு இயந்திரம் மோதியதில் பலி. இதனால் கொதித்தெழுந்த மாணவர்கள், மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது இராணுவம் சுட்டதில் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் காயமடைந்தனர்.



➡ யாழ்.சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் கட்டடம் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு.



➡ திருமலையில் பூரண கதவடைப்பு இடம் பெற்றது.

➡ யாழ்.இல் சிறிலங்கா படையினரின் அடாவடித்தனத்தை தொடர்ந்து சு.க அலுவலகம் தாக்கிச்சேதமாக்கப்பட்டது.

**05.**


➡ வேம்படி மகளிர் கல்லூரி மாணவியைப் பலிகொண்ட சம்பவம் சாதாரண விபத்து என்றவகையில் அதனை அடக்கி விடுதல் முடியாது. இதன் பின்னான பிரச்சினைகள் களையப்படவேண்டுமென படையினருடனான சந்திப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி வலியுறுத்தினார்.

➡ தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் சந்திப்பு.

இதன் போது கடந்த சில நாட்களில் வடக்கிலும், கிழக்கிலும் இடம் பெற்ற கலவரங்கள் பற்றி தீவிரகவனம் செலுத்தினோம் என இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் தெரிவிப்பு.



➡ வடபகுதி முஸ்லிம் மதகுருமார் சங்கத்தினர் அரசியல்துறைதுணைப் பொறுப்பாளரைச் சந்திப்பு.



➡ தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கணக்கியல் தொழில்நுட்ப முகாமைத்துவக் கல்லூரி கிளிநொச்சியில் திறப்பு.



➡ வெலிக்கந்த பகுதியில் இனம்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் ஆறு பேர் பலி.

➡ கிரிமிச்சைப் பகுதியில் இராணுவத்தினர் என நம்பப்படுவோரின் தாக்குதலில் போராளி பலி.

**06.**

➡ தாய்லாந்தின் இளவரசி கல்யாணிவதானா இலங்கைக்கு விஜயம்.

## மொகாலி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# பாகிஸ்தானின் முதல் இனிங்ஸ் ஆட்டம் 312 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது




இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் தனது முதல் இனிங்சில் 312 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட்போட்டி நேற்று மொகாலியில் ஆரம்பமானது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கங்குலி பாகிஸ்தானை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் எண்ணிக்கை பதினொன்றாக இருக்கும்போது முதலாவது விக்கெட்டை இழந்தது. பின் ஓட்டம் முப்பதாக இருக்கும்போது இரணடாவது விக்கெட்டை இழந ்தது. அடுத்து இக்கட்டான நிலையில் களமிறங்கிய அணித்தலைவர் இன்சமாம் பொறுப்புடன் ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதி கரித்த போதும்,இந்தியவேகப்பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்து வீச்



சால் நிலைத்து நிற்கமுடிய வில்லை.

இதனால் ஒருகட்டத்தில் 191 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்தது பாகிஸ்தான்.இந்த நிலை



யில் மத்தியதரவரிசை வீரர் அசிம்கமால் சிறப்பாக ஆட ஏனைய பின்வரிசை வீரர்கள் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க பாகிஸ தான் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அசிம்கமால் 91, இன்சமாம் 57, தவ்பிக் உமர் 44, ஓட்டங்களை முறையே அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மிகச் சிறப்பாகப் பந்துவீசிய தமிழக வீரர் பாலாஜி ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவரைவிட பதான், கும்ளே தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இன்று நடைபெறும் இரண்டாவது நாள் ஆட்டத்தில் இந்தியா தனது முதல் இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும்.

# நியூசிலாந்துக்கான சிறிலங்கா சுற்றுலா முரளிதரன் இடம்பெறுவதில் சந்தேகம்




சிறிலங்கா கிரிக்கெட் அணியின் நட்சத்திர பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தனது உடற்தகுதியை .வரும் 17ஆம் திகதி நிருபிக்க வேண்டியிருக்கிறார். அவர் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். எனினும் அவரின் காயம் மேலும் தீவிரமாகக் கூடாது எனக் கருதுவதால்ஏப்பிரலில் நியூசிலாந்தில் நடைபெறும் அவ்வணியுடன் விளையாடும் அணியில் அவரை இணைத்துக் கொள்ள அணிவீரர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

32 வயது முரளி இந்திய பெண்ணைத் திருமணம் செய்ய விருப்பது அறிந்ததே.

இதேவேளை அணியின் மற்றொரு வீரர் நுவன்சொய்சாவும் முதலாவது டெஸ்ட்டில் பங்கேற்கமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர் வைத்திய பரிசோதனைக்காக அவுஸ்திரேலியா பயணமாகவுள்ளார்.

எனினும் இரண்டாவது போட்டியில் பங்கேற்பார். என எதிர் பார்க்கப்படுகிறது.

நியூசிலாந்து செல்லும் அணி விபரம் இவ்வாரம் முடிவு செய்யப்படும்.அத்துடன் முக்கிய பந்து வீச்சாளர்களான பர்வீஸ்மஹ்ரூப் லசித்த மாலிங்க, டில்கார பெர்னாண்டோ, ருச்சிரபெரேரா ஆகியோரும் காயப்பட்டுள்ளமை அணிக்கு பெரும் நெருக்கடியாக வுள்ளது.



மட்ரிட்டில் நடைபெற்ற ஐரோப்பிய சம்பியன் போட்டியில் தடியூன்றிப் பாய்தலில் சாதனையை முறியடித்த ரஷ்யாவின் யெலினா இஜின்பாயேவா துள்ளிக்குதிக்கிறார்.

# 600 விக்கெட்டுக்களை வீழ்த்துவதே எனது இலட்சியம்-மெக்ராத்



டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 விக்கெட் எடுப்பதே தனது இலட்சியம் என்று அவுஸ்திரேலியாவின் மெக்ராத் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது;

500 விக்கெட்டுக்களை எடுப்பதே தனது இலக்காக முதலில் இருந்தது. ஆனால் தற்போது மேலும் 100 விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதே இலட்சியமாகவுள்ளது. கணுக்காலில் செய்து கொண்ட சத்திரசிகிச்சை எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. என்னால் தொடர்ந்து சிறப்பாகப் பந்துவீச முடியும் என்ற நம்பிக்கையுள்ளது. இவ்வாறு மெக்ராத் கூறினார்.

இதே 35 வயதில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த லிண்ட்வால் 228 விக்கெட்டும்,மில்லர் 170 விக்கெட்டும், கைப்பற்றியிருந்தனர். ஆனால் மெக்ராத் இந்த வயதில் 481 விக்கெட்டை எடுத்துள்ளார். இன்னும் நான்கு ஆண்டுகள் அவர் விளையாட முடியும் என்று நியூசிலாந்து முன்னாள் சகலதுறை வீரர் ரிச்சர்ட் ஹேட்லி கூறியுள்ளார். 500விக்கெட்டைக் கைப்பற்ற மெக்ராத்துக்கு இன்னும் 19 விக்கெட்தான் தேவை. அவுஸ் திரேலியா நியூசிலாந்து அணிகள் இடையேயான மூன்று டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் நாளை கிறிஸ்ட் சர்ச் நகரில் தொடங்குகிறது.

# மேற்கிந்தியத்தீவு வீரர்களை அணியில் இணைக்க நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவு



மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் வீரர்களுக்கும் விளம்பர அனுசரணையாளர்களுக்குமிடையில் எழுந்துள்ள பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர நேற்று முன்தினம் கிரனடாவில் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளன.

எனினும் சந்திப்புக்குத்தலைமை தாங்கிய கிரனடாவின் பிரதமமந்திரி கெய்த மிச்சல் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இறுதியான முடிவு எட்டப்படாவிட்டாலும் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு கிரிக்கெட் வீரர்களுக்கும், சபை உயரதிகாரிகளுக்கும், விளம்பர அனுசரணை வழங்கும் நிறுவனத்துக்குமிடையில் நடைபெற்றது.

மிச்சல் மேலும் தெரிவித்ததாவது, இரு பகுதிகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளைப் புரிந்துள்ளதாகவும் அதனை திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கான முடிவை வியாழனுக்கு முன்பாகத் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.



## விளையாட்டு

### கொமர்ஷல் வங்கி அணியைத் தோற்கடித்தது சனசக்தி அணி

யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர்களுக்கும், சனசக்தி கம்பனி உத்தியோகத்தர்களுக்கும் இடையில் மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்தசனிக்கிழமை மாலை இரண்டு மணியளவில் நடைபெற்ற 20 ஓவர்கள் கொண்ட மென்பந்துக் கிறிக்கெட் போட்டியில் யாழ்ப்பாண சனசக்திக் கம்பனி 16 ஓட்டங்களால் யாழ்ப்பாண கொமர்ஷல் வங்கியை வெற்றி கொண்டது.

சனசக்தி கம்பனி அணி 14.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொமர்ஷல் அணியினர் 14.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 83 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுத் தோல்வி [illegible]ந்தது.

### பேட்டி வேண்டாம் போட்டி போதும் பாகிஸ்தான் வீரர்களுக்கு அறிவுரை



பத்திரிகை, தொலைக்காட்சிகளுக்குப் பேட்டியளிப்பதைத் தவிர்க்குமாறு தனது கிரிக்கெட் வீரர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

போட்டியின்போது கவனம் சிதறாமலிருக்க பேட்டியளிப்பதைத் தவிர்க்குமாறு வீரர்களை அணி மேலாளர் சலீம் அல்டா.்.ப் கேட்டுக்கொண்டுள்ளதாக தி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தர்மசாலாவில் நடைபெற்ற இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் அணிக்கு எதிரான போட்டியின்போது 70 முதல் 80 பத்திரிகையாளர்கள் தொடர்ந்து வீரர்களைப் பேட்டி எடுத்தனர். இதனால் வீரர்கள் கவனம் சிதற வாய்ப் புள்ளது. அதனால் இவ்வாறு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அச்செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் உல்ஹக் உட்பட பல முக்கிய வீரர்கள்,இந்திய பத்திரிகை மற்றும் மின்னணு ஊடகங்களில் தங்களுடைய கருத்துக்களை எழுதி வருகின்றனர்.

# சர்வதேச கோல்ப்போட்டி டைகர்வூட் சம்பியனானார்



சர்வதேச கோல்ப் போட்டியில் அமெரிக்காவின் டைகர்வூட் அதே நாட்டைச் சேர்ந்த பில்மைக்கல்சன்னை வென்று முதலாம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இவர் கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற போட்டியில் பிஜியின் விஜேசிங்கிடம் தோல்வி கண்டு பின்தள்ளப்பட்டார். சிங்தொடர்ந்து ஆறு மாதங்களாக முன்னணியில் பிரகாசித்தார்.


பல போட்டிகளில் தோல்வி கண்ட மைக்சன் இப்போட்டியில் இறுதிவரை முன்னேறினார். இவ் வெற்றிமூலம் வூட் 515 ஆயிரம் பவுண்(990 டொலர்) தொகைவூட்டுக்குப் பரிசாகக் கிடைத்தது.



தைபேயில் நடந்த கிழக்காசிய கால்பந்து சம்பியன்ஷிப் போட்டியில், ஹொங்கொங் 16–0 என்ற கோல் கணக்கில் குவாம் அணியை வீழ்த்தியது. எதிரணி வீரர்களைச் சமாளித்து பந்தை தலையால் முட்டித்தள்ள முற்படுகிறார் ஹொங் கொங் வீரர் சன்–சியூ–கி(இடது)

### கல்லூரி அணிகள் பங்கேற்கும் வடக்கின் போர் வரும் வாரத்தில்

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றிக்கிடையேயான வடக்கின் பெரும் போர்'' வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரிகளுக்கு மிடையேயான பொன் அணிகளின் மோதல் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிகளுக்குமிடையேயான நாயகர்களின் துடுப்பாட்டப் போர் ஆகியன அடுத்தவாரம் முதல் ஆரம்பமாக உள்ளதைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் சிலர் மற்றும் துடுப்பாட்ட ரசிகர்களிடையே புதிய உத்வேகம் ஏற்படத் தொடங்கியுள்ளது. (41)



**சிந்தனைக்கு**

சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்கு முறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காவும், போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 09-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## கூறியதில் என்ன தவறு!

உலக வங்கியின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தெரிவித்ததாகக் கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றில் வெளி வந்த செய்தி தொடர்பாக ஜே.வி.பி தனது கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. உலக வங்கிப் பிரதிநிதியின் கூற்றுக்கள் நாட்டின் இறைமைக்கு சவால் விடுவதாகவும், பங்கம் விளைவிப்பதாகவும் உள்ளது. ஆகையினால் உலக வங்கிப் பிரதிநிதி தனது கூற்றுக்களைப் வாபஸ் பெற வேண்டும். அல்லது உலக வங்கி அவரைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என ஜே.வி.பி சீறிப்பாய்ந்துள்ளது.

இவ்வாறு ஜே.வி.பி கூச்சலிட்டதற்கு உலக வங்கிப் பிரதிநிதி இலங்கையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உத்தியோகப் பற்றற்ற அரசொன்று இருக்கின்றது. விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் வீடுகளைப் புனரமைப்பதற்காக ஆறு பில்லியன் (600 கோடி ரூபா) ரூபாய்களை உலக வங்கி செலவிடும் என்று கூறியதாக வெளிவந்த செய்திகளே காரணமாகும். இதேவேளை ஜே.வி.பி யின் இச் சீற்றத்தைத் தொடர்ந்து உலக வங்கிப் பிரதிநிதி வெளியிட்ட அறிக்கையில், தான் அவ்வாறு கூறவில்லை எனவும் பத்திரிகை தான் கூறியவற்றை திரிபுபடுத்தி விட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதன் காரண்மாக ஜே.வி.பி யினர் சிலவேளை சமாதானம் அடைந்திருக்கலாம். சிலவேளை சமாதானம் அடையாமலும் இருக்கலாம்.

இதேவேளை உலக வங்கிப் பிரதிநிதி பத்திரிகை பிரசுரித்தது போன்று கூறினாரா? அன்றி அவர் கூறியதைப் பத்திரிகை திரிவு படுத்தியதா? இதில் எது சரியாக இருப்பினும் இருக்கட்டும். ஆனால் உலக வங்கிப் பிரதிநிதி கூறியதற்கும் யதார்த்தத்திற்கும், எந்த வித வேறுபாடும் இல்லை என்பதே உண்மை.

அதாவது இலங்கைத்தீவில் தமிழர் தாயகப் பகுதியில் சுமார் எழுபது சதவீதம் அளவிலான பிரதேசம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அங்கு ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உண்டு. அரசியல்துறை, நிதித்துறை, ஆயுதப் படைப்பிரிவுகள் என்பனவும் உள்ளன.

அங்கு சிறிலங்கா அரசின் ஆட்சி அதிகாரம் என்பது அமுலில் இல்லை. சட்டம், ஒழுங்கு என்பன அப்பிரதேசத்திற்கு உரியதாகவுள்ளது. இந்நிலையில் அப்பிரதேசத்தில் உத்தியோகப்பற்றற்ற அரசு ஒன்று உள்ளது. எனக் கூறுவது எந்த வகையில் தவறானதாகும்?

சிறிலங்கா அரசின் இறைமை ஒருமைப்பாடு என்பன பற்றிச் பேசும் ஜே.வி.பி யினர் இலங்கைத்தீவின் ஒரு பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பதை மறுக்க முடியுமா? அங்கு சிறிலங்கா அரசின் ஆட்சி அதிகாரம் நடைமுறையில் உள்ளது என்று தான் கூற முடியுமா? விடுதலைப்புலிகளின் அனுமதியும், ஒத்துழைப்பும் இன்றி அப்பகுதியில் நடவடிக்கை எதையும் மேற்கொள்ளத்தான் முடியுமா?

இலங்கையின் இறைமைக்கும், ஐக்கியத்திற்கும் பாதுகாவலர்கள் தாமே என்பது போன்று கூச்சலிடும் ஜே.வி.பி யினர் கடைப்பிடிக்கும் கொள்கைகள்ளானது எந்தளவிற்கு இலங்கையின் ஐக்கியத்தைப் பேணத்தக்கதாக இருக்கும். ஏனெனில் பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்குத் தலைமை தாங்க முற்படும் எவருமே இலங்கையின் ஐக்கியத்திற்கும், இறைமைக்கும் பாதுகாவலராக இருக்க முடியாது என்பதே கடந்த கால அனுபவம்.

சுதந்திரத்தின் பின் இலங்கையை ஆண்ட சிங்கள ஆட்சியாளர்கள் யாவரும் தாமே பௌத்த சிங்கள தேசத்தின் இறைமைக்குப் பாதுகாவலர் எனக் கூறிக் கொண்டனர். இதன் மூலம் பௌத்த சிங்களப் பேரினவாதத் தலைவர்களும் தாமே என வெளிக்காட்டவும் விளைந்தனர் இதன் மூலம் இவர்கள் அரசியல் லாபம் ஈட்டினும் நாட்டின் இறைமையையும், ஒருமைப் பாட்டையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் அவர்களின் நடவடிக்கைகள் இருந்தன என்பதே வரலாறாகும்.

இத்தகைய நிலையில் தற்பொழுது பௌத்த சிங்கள பேரினவாதத்திற்குத் தலைமை தாங்கும் ஜே.வி.பி யும் கடந்த கால ஆட்சியாளர்களின் பாதையிலேயே சென்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முனைகின்றது. இதில் அவர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமா? முடியாதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியது சிங்களமக்களே.

ஆனால் சிங்கள மக்கள் கடந்த கால வரலாற்றை மறந்து ஜே.வி.பி க்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவார்களேயானால் நிச்சயமாக முன்னைய சிங்களத் தலைவர்கள் தொடக்கி வைத்த நாட்டிற்குத் துரோகம் இழைக்கும் செயலை இவர்கள் நிறைவு செய்ததாகவே இருக்கும். அதாவது சிறிலங்கா அரசு இலங்கையில் தனது ஆட்புலப் பரப்பையும், இறைமையையும் குறுக்கிக் கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# சமாதானம் மீது உண்மையான பற்று இருப்பின் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவேண்டும்

## -ஐ.தே.க.விடம் திருமலை தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்து

சமதானத்தின் மீதும், தமிழ் பேசும் மக்கள் மீதும் உண்மையான பற்றுதல் இருக்கின்றதென்பதை உறுதிப்படுத்துவதாயின் அவசரகாலச் சட்டத்திற்கெதிராக ஐக்கிய தேசியக் கட்சி வாக்களிக்க வேண்டும். இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அவசரகாலச் சட்டமானது தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்டது அதன்கீழ் பயங்கரவாத தடைச் சட்டத்தை அமுல்படுத்தி ஒட்டு மொத்தமாக தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கிக் கொன்று குவித்த வரலாற்றை யாவரும் அறிவார்கள். இதனை ஆரம்பித்து நடைமுறைப்படுத்திய பெருமை ஐக்கிய தேசியக் கட்சிக்கே உரியது. சிறிலங்கா தேசத்தின் முன்னாள் சனாதிபதி காலஞ்சென்ற ஜே.ஆர். ஜெயவர்த்தன அவசரகாலச் சட்ட விதிகளை தமிழ் மக்களுக்கெதிராக எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை சர்வதேசமும் அறியும்.. ஐக்கிய தேசியக் கட்சியால் தொடக்கி வைக்கப்பட்ட இச்சட்ட மூலத்தைப் பயன்படுத்தியே தற் போதைய அரசாங்கமும் அதே வழியில் தமிழ் மக்களுக்கெதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் உள்வாங்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்ட தமிழ் மக்கள் இன்றும் விடுதலை செய்யப்படாத நிலை யில் பல ஆண்டுகளாக சிறையி லிருக்கின்றனர்.

அவர்களை விடுதலை செய்யுமாறு சகல தரப்பினராலும் விடுவிக்கப்பட்ட வேண்டுகோள் நிராக்ரிக்கப்பட்டு அப்பாவியான எம்மக்கள் சொல்லொணாத் துயரத்தைச் சிறையிலேயே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் சுனாமி இயற்கை அழிவு ஏற்பட்டதன்பின் தமிழ் பேசும் மக்களினது பிரதேசங்களையும், தமிழ் பேசும் மக்களையும் இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதற்காக பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை சமர்ப்பிக்கின்றபொழுது அதனை எதிர்த்து வாக்களிக்காது வாக்களிப்பி லிருந்து ஐக்கிய தேசியக் கட்சி வெளியேறிச் செல்வதென்பது தமிழ் பேசும் மக்களை ஏமாற்றி இரட்டை வேடம் போடுகின்ற கபட நாடகமென்றே தமிழ் மக்களாகிய நாங்கள் கருதுகின்றோம்.

சமாதானத்தை உருவாக்குவதற்கு முன்நின்ற எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும், அவரது கட்சியும் தமிழ் மக்களினது பிரச்சினையில் அதிகளவு அக்கறையுடையவர்களாகவும், சமாதானத்தின்பால் பற்றுறுதி உடையவர்களாகவும் தங்களை வெளிப்படுத்தி அவசரகாலச்சட்ட விதிகளுக்கெதிராகப் பேசியும், அறிக்கையை விடுத்தும் வருகிறார்கள். அவ்வாறாயின் ஏன் அவசரகாலச்சட்ட விதிகளுக்கெதிராக வாக்களிக்காது ஒதுங்கிக் கொள்ள வேண்டும்? பேரினவாத சிங்கள பௌத்தத்திற்கும் ஆதரவு, தமிழ் பேசும் மக்களுக்கும் ஆதரவு என்ற பூச்சாண்டி காட்டும் செயலை ஐக்கிய தேசியக் கட்சி செய்யாது. அவசரகாலச் சட்ட விதிகளை எதிர்த்து வாக்களித்தால் மட்டுமே ஐக்கிய தேசியக்கட்சியின் மீது தமிழ்மக்கள் ஓரளவாவது நம்பிக்கை வைக்க முடியும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நச்சுப்பாம்புகளே. ஒன்று புடையன் என்றால் மற்றையது கருநாகம். இந்த நிலைப்பாட்டில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுப்பதனை சமர்ப்பிக்கப்படவுள்ள அவசரகாலச் சட்ட விதிகளுக்கெதிராகப் பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்து எதிர்த்து வாக்களிக்க வேண்டுமெனத் தமிழ் பேசும் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம். உங்களால் உருவாக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் தான் தமிழ்மக்களை இன்றும் அழிப்பதற்குப் பயன்படுத்தப் படுகின்றதென்பதை உணர்ந்து கொள்வீர்களாயின் அதுவே தமிழ் பேசும் மக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய நன்மையாக இருக்குமென அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட-கிழக்கிற்கு நேரடியாக நிதி உதவி உலக வங்கி முடிவுக்கு ஐ.தே.க வரவேற்பு

உலக வங்கி புலிகளுக்கு வட கிழக்கு நேரடியாக 6 பில்லியன் இலங்கை ரூபாவை சுனாமி அனர்த்த நிதியாக வழங்குவதை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்றுள்ளது.

ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண விடம் இது தொடர்பில் கேட்கப்பட்ட போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

சுனாமி அனர்த்தம் தொடர்பாக அரசாங்கம் நீதியான முறையில் செயற்படவில்லை. திட்டமிட்டு வட கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக் கப்பட்டன.

இந்நிலையில் அதனை நிவர்த்தி செய்வதற்கு விடுதலைப் புலிகளிடம் நேரடியாக நிதி வழங்குவது நியாயமானதென அவர் தெரிவித்தார்.

அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை போன்ற உதவிகள் வழங்கப்படவில்லையெனவும் அத்துடன் அம்மக்கள் தமது வழமையான வாழ்க்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கமும், சனாதிபதியும் தவறிவிட்டார்களெனவும் சுட்டிக்காட்டினார்

சர்வதேச சமூகம் வழங்கிய நிதி ஒழுங்கான முறையில் செலவு செய்யப்படுவதற்கான திட்டவரைவுகள் எதனையும் அரசாங்கம் ஏனைய கட்சிகளுடன் இணைந்து மேற் கொள்ள முன்வரவில்லையென்னும் குற்றச்சாட்டினையும் அவர் முன்வைத்தார். (32)

# தொழில் வாய்ப்புத் தேடி வெளிநாடு செல்வோர் தொகை அதிகரிப்பு

## -சிறிலங்கா புள்ளி விபரங்கள் தெரிவிப்பு

இலங்கையில் தொழில் வாய்ப்பு மந்தநிலையை அடைந்துள்ளமையால் தொழில்தேடி வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்தவண்ணமே இருப்பதாக புள்ளி விபரங்கள் வெளிக்காட்டுகின்றன

கடந்த வருடம் மட்டும் 213453 பேர் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளதாகவும், 2003ஆம் ஆண்டில் 208803 பேர் தொழில் பெற்றுள்ளதாகவும் இவர்களில் சவுதியரேபியாவிற்கு (7691), குவைத் (36533), ஐக்கிய அரபு. ராஜ்யம் (32698), எனவும் இத்தொகையினரில் 110034 பேர் வீட்டுப் பணியாளர்களாக பணிபுரிவதற்காகச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# சாத்தியமற்ற தர்க்கங்களை விடுத்து நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவுக!

## -சனாதிபதி சந்திரிகா கோரல்

புதிய உலகப் போக்குத் தொடர்பாக தெளிவில்லாது சில குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் வாதிகள் நடைமுறைச் சாத்திய மற்ற தர்க்கங்களை முன்வைத்து நாட்டின் எதிர்காலப் போக்கிற்கு இடையூறுகளை ஏற்படுத்துவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி குறித்துப் பேசமுடியும். சிலவற்றைக் கட்டி எழுப்பவும் முடியும். மற்றைய பக்கத்தில் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால் ஒரு குண்டு கொழும்பு அல்லது எங்காவது வெடித்தால் நாடு மீண்டும் பலவருடங்களுக்குப் பின்நோக்கிச் செல்லும் எனவும் சனாதிபதி கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெண்கள் அமைப்பினர் நேற்று ஏற்பாடு செய்த மகளிர் அமைப்பின் சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்: புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. எமது நாடு மிகவறிய நாடு. இதனைத் தனியாகக் கட்டியெழுப்ப முடியாது யார் என்ன கூறினாலும் பொருளாதார விஞ்ஞானம் குறித்து தெரியாத சிலரும், ஒன்றும் தெரியாத அரசியல்வாதிகள் சிலரும், இதேபோன்று சில கட்சிகளைத் சேர்ந்தவர்களும் நாட்டைத் தனியாகக் கட்டியெழுப்ப முடியும் எனக் கூறுகின்றனர். இது முடியுமென றால் அவர்கள் அதனைச் செய்ய வேண்டும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

இன்று உலகம் உள்ள முறையின் படி சுனாமிக்குப் பின்னர் மற்றைய நாடுகளின் உதவி இல்லையானால் எம்மால் இதனைக் கட்டியெழுப்ப முடியாது. உண்மையைக் கூறுவதானால் உலகமுறை அதுவே. அதற்கு ஒரு காரணம் எமது நாட்டைப் பிடித்துக் கொண்டு எமது நாட்டில் உள்ள வளங்களை அவர்கள் சுரண்டுகின்றனர். இது அனைத்தும் உண்மை. எனினும் இதற்கு எம்மால ஒன்றும் செய்வதற்கில்லை என்றார் அவர்.

# முல்லைத்தீவு உண்ணாப்புலவில் 130 வீடுகள் கொண்ட குடியிருப்பு திறப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் பராமரிக்கப்பட்டு வரும் மக்களுக்கான தற்காலிகக் குடியிருப்புக்களை அமைக்கும் வேலைத்திட்டச் செயற்பாடுகளை வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

நோர்வே நாட்டு நிதிப்பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் இவ்வேலைத்திட்டச் செயற்பாடுகளின் தொடர் நடவடிக்கையாக, நேற்றுப்பிற்பகல் இரண்டு மணியளவில் முல்லைத்தீவு உண்ணாப்புலவு என்னும் இடத்தில் 130 குடும்பங்களுக்குமான தற்காலிக வீடுகளைக் கொண்ட மற்றுமொரு குடியிருப்புத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுனாமிப்பேரலையினால் பாதிக்கப்பட்டு முல்லைத்தீவு கள்ளப்பாடு என்னும் கரையோரக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து,முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் பராமரிக்கப்பட்டு வந்த குடும்பங்களே நேற்று குடியமர்த்தப்பட்ட குடும்பங்களாகும். இந்த மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பொறுத்து ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் சமையல் உபகரணங்கள்,உலர் உணவுப் பொருட்கள், படுக்கை விரிப்புக்கள் என்பன உட்பட தலா ஆயிரம் ரூபா பணமும் முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டன.

இந்த வீடுகள் கையளிப்பு நிகழ்வில் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணியாளர்களில் ஒருவரான வின்சன் உட்பட முல்லை மாவட்ட சுனாமிப் பேரலை அனர்த்த விசேட பணிப்பாளர் றெஜி,முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் ராமமூர்த்தி,தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள், கள்ளப்பாடு கிராமசேவையாளர்,போராளிகள் பொதுமக்களெனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

# பிரதமர் பதவிக்காக கதிர்காமர் ஜே.வி.பியை ஆதரிக்கிறார்

## - ஐ. தே. கட்சி குற்றச்சாட்டு

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமர் பதவிக்காகவும், அநுர பண்டாரநாயக்க சனாதிபதி பதவிக்காகவும் ஜே.வி.பியை ஆதரித்து வருவதாக ஐக்கிய தேசியக் கடசி குற்றம் சுமத்தியுள்ளது.பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நேற்றுக் கொழும்பில் ஊடக மாநாடு ஒன்றில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அரசாங்க சமாதான செயலகப் பிரதானி ஜயந்த தனபாலவுக்கும், லக்ஷ்மன் கதிர்காமருக்கும் இடையிலான தனிப்பட்ட யுத்தமே சமாதான நகர்வில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டார் இதே வேளை சனாதிபதி நேற்று நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில், ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திர கட்சியும் இனப் பிரச்சினைத் தீர்வில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடடுள்ளார்

### தெற்கிலுள்ள...

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

சுனாமித்தாக்கத்தின் பின்னர் விடுதலைப் புலிகளுடன் நிர்மாணப் பணிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் அரசாங்கத்தின் விருப்பத்துடனேயே இடம்பெற்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வெளிநாட்டுத்தலைவர்களும், உலகவங்கி போன்ற பன்முக உதவி நிறுவனங்களும் விடுதலைப் புலிகளுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் எவ்வித தொடர்புகளையோ பேச்சுவார்த்தைகளையோ வைத்திருக்கக் கூடாதென எப்போதாவது வலியுறுத்தியதா என லலந்த விக்கிரமதுங்க வினாவியபோதே பீற்றர் ஹரோல்ட் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளும் போது அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளோம். ஒரேயொரு வேளை மட்டும் அந்தச் சந்தர்ப்பம் பொருத்தமானதல்ல எனக் கருதினார்கள். அதனைத் தவிர இத்தகைய சந்திப்புக்கள் பொருத்தமானவையெனவும், சமாதான உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்லப் பொருத்தமானவையெனவும் பதற்றத்தைக் குறைத்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கிடையில் நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் வளர்க்கும் எனவும் கருதினார்கள்.

கடந்த காலத்தில் அவர்களின் தேசத்துக்குச் செல்வதற்கு அரசாங்க உலங்குவானூர்திகளையே பயன்படுத்தியுள்ளோம். எனவே அரசாங்கம் இதனை எப்பொழுதுமே வரவேற்றுள்ளது. நான் நினைக்கிறேன் ஒப்பீட்டளவில் தெற்கிலுள்ள சிறியளவிலானவரே வடக்குடன் தொடர்பினை வைத்திருக்கக் கூடாதென்கின்றனர். அரசாங்கம் இந்த அமைப்பைத் தடைசெய்த அமைப்பாகவும், அவர்களுடன் பேசக் கூடாதெனவும் சொன்னால் அது வித்தியாசமானது. ஆனால் எமது நடவடிக்கைகள் அரசாங்கத்தின் ஆதரவுடனேயே மேற்கொள்ளப்பட்டன என உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றல் ஹரோல்ட் தீர்க்கமாகமாகத் தெரிவித்தார்.

### மட்டு...

இருப்பிடங்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்து வதில் தொடர்ந்து ஏற்படும் தாமதங்கள், நிரந்தர வீடமைப்பதற்குரிய காணிகள் இதுவரை அடையாளம் காணப்படாமை, மற்றும் தமதுமீள் குடியேற்றம், நிவாரணப்பணிகள் தொடர்பான நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளின் அசமந்தப் போக்கு ஆகியவற்றைக் கண்டிக்கும் முகமாகவே இந்த வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் இது பற்றி ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். வீதியில் கூடாரங்கள் அமைத்து தமது இருப்பிடங்களாக அதனைப் பிரகடனப்படுத்தியுள்ள நூற்றிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சமையலிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை விசேட அதிரடிப்படையினரும், பொலிசாரும் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் பெரு முயற்சிகள் எடுத்தபோதிலும் அது கைகூடவில்லை.

அதிரடிப்படை அதிகாரி, பொலிஸ் அதிகாரி, உப்புள்சென விரட்ண காரைதீவு அதிரடிப்படையின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மத்திம பண்டார ஆகியோர் மறியலில் ஈடுபட்டிருந்தவர்களிடம் நேரில் சென்று உரையாடிய போதும் அதுவும் வெற்றியளிக்கவில்லை.

# கஞ்சா கடத்திச்சென்ற பயணி ஆய நிலையத்தில் பிடிபட்டார்

கடந்த வாரப் பிற்பகுதியில் புளியங்குளம் ஆயநிலையமூடாக கஞ்சா கடத்திச்செல்லும்போது பயணி ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார்.

தனியார் ஊர்தியொன்றின் மூலம் யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்து கொண்டிருந்த வேளை இவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு தமிழீழக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இவர் 1/4 கிலோ கஞ்சாவை எடுத்துச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கண் சத்திரசிகிச்சைக்கு பதிவு செய்யக் கோரிக்கை

13.03.2005 தொடக்கம் 23.03.2005 வரையான காலப்பகுதியில் நடைபெறவுள்ள கண் சத்திரகிச்சைக்குப் பதிவு செய்யத் தவறியவர்கள் நாளை காலை எட்டு மணி தொடக்கம் பிற்பகல் இரண்டு மணிவரை கிளிநொச்சி பொன்னம்பலம் மருத்துவமனைக்கு வந்து பரிசோதித்து தமது பதிவினை மேற்கொள்ளுமாறு மருத்துமனை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

# ஜீ—7 நாட்டுப்பொருட்களால் இலங்கைக்கு பெரும் அழுத்தம்

## -ஜே.வி.பி. கூறுகின்றது

இலங்கைக்குத் தேவையான பெருமளவு பொருட்கள் ஜீ.ஏழு நாடுகளில் இருந்தே கொண்டுவரப்படுகின்றன. இது சமூகப் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு அழுத்தத்தை ஏற்படுத்துகின்றதென மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.கடுவலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணிக் கூட்டத்திலேயே விமல்வீரவன்ச இவ்வாறு கூறினார் அவர்அங்கு மேலும் கூறுகையில்: ஜீ ஏழு நாடுகளில் இருந்தே இலங்கைக்கு அனைத்துப் பொருட்களும் அனுப்பப்படுகின்றன. உணவுப் பொருள்கள் மற்றும் பால்மாப் பைக்கற் தொடக்கம் சீனி,ரொபி, சிகரெட்வரை அனைத்துப் பொருள்களையும் இலங்கைக்கு அனுப்புவது இந்த நாடுகள்தான் என்றார் விமல் வீரவன்ச.

# கேணல் கிட்டு ஞாபகார்த்த சிறப்பு முத்தமிழ் கலையரங்கம்

கேணல் கிட்டு அவர்களின் 12ஆம் ஆண்டு நினைவு சிறப்பு முத்தமிழ் கலையரங்கம் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு புலிகளின் குரல் நடுவப் பணியக அமலன் அரங்கில் நடைபெறவுள்ளது. மேற்படி நிக்ழ்வில் சிறப்புரைகள் மற்றும் "தொடுவானம்"நாடகம் என்பன இடம்பெறவுள்ளதுடன், 2004ஆம் ஆண்டிற்கான நாளாந்த அவதானிப்பு வினா விடைப் போட்டியில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. மற்றும் முத்தமிழ் கலையரங்க போட்டிக்கான சான்றிதழ் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### கண்காணிப்புக்குழு...

செய்து கொண்டிருந்தபோதே பின்னால் இருந்து வந்த பாரவூர்தி வேகக்கட்டுப்பாட்டை இழந்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பயணம் செய்த பிக் அப் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தின்போது இரு வாகனங்களுக்கும் சேதமேற்பட்டிருந்தபோதும் எவருக்கும் எதுவித காயமும் ஏற்படவில்லை.

சம்பவ இடத்துக்குச்சென்ற பொலிசார் விபத்தின் தன்மைகளைப் பதிவுசெய்து கொண்டபின்னே இரண்டு வாகனங்களும் வீதியிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன. (கா)

### இராணுவ

விசேட மரபணுப் பரிசோதனையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் வவுனியாவில் இடம்பெற்ற இராணுவப் பயிற்சிப் பாசறையின்போது இவ்வதிகாரி சி-4 வெடிப்பொருளினை பயிற்சிலிருந்தவர்களை உண்ணுமாறு பணித்தபோதே 21 பேரும் பாதிக்கப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் அவர்களுக்கு பொறுப்பாகவிருந்த அதிகாரி காணாமல் போயிருந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க தெரிவித்தார்.

### ஊர்வலங்கள்...

பொன்தியாகம் அவர்கள் ஆசியுரையினை வழங்கினார். அடுத்து உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையைச் சேர்ந்த மணிமேகலை அவர்கள் எழுச்சிநாள் தொடர்பான கருத்துரையினை வழங்கினார்.

அடுத்து சிறப்புரையினை தூயவன் அரச அறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து மகளிர் கலைபண்பாட்டுக்கழத்தினரின்கலை நிகழ்வுகள் நடைபெற்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்துப் பிரதேசங்களையும் ஒருங்கிணைத்து மல்லாவிப் பிரதேசத்தின் வண்ணன் விளையாட்டு மைதானத்தில் பெண்கள் தின நிகழ்வுகள் எழுச்சி பூர்வமாக நடைபெற்றன. நேற்றுமாலை ஏழு மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வு மல்லாவிப் பிரதேச மாதர் சங்கத் தலைவி விஜயலட்சுமியின் தலைமையில் நடைபெற்றது. இதில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டுக் கழகங்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. பரிசில்களைப போராளிக் கவிஞர் தமிழவள் அவர்களும், மல்லாவி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அமிர் தலிங்கம் அவர்களும் வழங்க, சிறப்புரைகளை முல்லை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் முகுந்தன் அவர்களும். போராளிகவிஞர் தமிழவள் அவர்களும் வழங்கினர். தொடர்ந்து சங்கநாதக் கலைஞர்களின் கலைநிகழ்வுகளும். இசைநிகழ்வுகளும் மற்றும் பாடசாலை மாண வர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற் றன.

யாழில் பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட எழுச்சி தின நிகழ்வின் முடிவினில் அடிமைத்தனத்தை வெளிப்படுத்தும் ஆக்கிரமிப்புப் படையினரின் கொடும்பாவி பரமேஸ்வரா சந்திப் பகுதியினில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டது.

முன்னதாக மாலை 6.30 மணியளவில் முன்னால் பறைகளை ஒலிக்கவிட்டவாறு பெண்கள் ஊர்வலமாக வர பின்னால் பாடையொன்றில் ஆக்கிரமிப்புச் சின்னமானகொடும்பாவி வைக்கப்பட்டு எடுத்து வரப்பட்டிருந்தது.

பரமேஸ்வராச் சந்திப் பகுதியினில் குறித்த கொடும்பாவியினை அஞ்சலிக்கு வைத்த பின்னர் பிரதிநிதிகள். அருகிலுள்ள இந்து ஆலயத்திற்குச் சென்று விசேட வழிபாட்டிலும் ஈடுபட்டனர். பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக பலாலி வீதி வழியே சென்று அருகிலுள்ள அரசடிச் சந்தி இராணுவக் காவலரணைச் சென்றடைந்தனர்.

அண்மையில் தீயிடப்பட்டு தற்போது மீள நிர்மாணிக்கப்பட்டுள்ள குறித்த காவலரணில் இருந்த படையினரிடம் குடாநாட்டைவிட்டு வெளியேறக்கோரும் தமது துண்டுப் பிரசுரங்களை அவர்கள் கையளித்தனர். இக்கோரிக்கையினை ஏனைய படையி னரிடமும் எடுத்துக் கூறுமாறு கேட்டுக் கொண்ட போராட்டக்காரர்கள் மீண்டும் அங்கிருந்து திரும்பி பலாலிவீதியூடாகப் பரமேஸ்வராச் சந்தியை வந்தடைந்தனர்.

திரும்பும்போது தமது கைகளில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு வருகை தந்திருந்த அவர்கள் ஏற்கனவே கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டிருந்த ஆக்கிரமிப்புப் படையினரின் சின்னங்கள் அடங்கிய கொடும்பாவிக்குப் பறைகளை ஓங்கி ஒலிக்க விட்டவாறும், கோசங்களையிட்டவாறும் தீயிட்டனர்.

திருகோணமலை மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நேற்றுப் பிற்பகல் திருகோணமலை கலாச்சார மண்டபத்தில் மகளிர் தினத்தையொட்டி நடாத்திய நிகழ்வின் போது விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி காருண்யா தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றினார்.

சர்வதேச பெண்கள் தினம் வடமராட்சிப் பிரதேசத்தில் மிகவும் சிறப்பான முறையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நிகழ்ந்தேறியது. செல்வி.ச.கோகுலராதா தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் சிறப்புரையினை மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தினார். அடுத்து கருத்தமர்வின்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவைச்சேர்ந்த வேளினி வல்லிபுரம் அவர்கள் பெண்களுக்குரித்தான உரிமைகள், சட்டங்கள் தொடர்பாக கருத்துரை வழங்கினார்.

வவுனியாவில் சர்வதேச மகளிர் தினம் வெகுசிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது வவுனியா நகரசபை மண்டபத்தில் நடை பெற்ற இந்த நிகழ்வை வவுனியா பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில் அரச அதிகாரிகள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் என்று பலதரப்பட்டோரும் கலந்து கொண்டனர் இந்நிகழ்வினை வவு. பிரதேச செயலர் சுகந்தி துரைசாமி தலைமை தாங்கி நடத்தினார்.

(கு,சு,தீ,24,33,27, 41,கா,சு,21,25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது